# காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
# ஆண்டு அறிக்கை
# 2018

# உள்ளடக்கம்


தவிசாளரின் செய்தி ……………………………………………………………………4

1. **அறிமுகம்** ……………………………………………………………………6

**2. சட்ட மற்றும் கொள்கை இடையீடுகள்** ………………………………………8

காணாமல் போனமைக்கான சான்றிதழ் …………………………………………8

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் சட்டம் ……………………………………10

தடுத்தல் ……………………………………………………………………10

பயங்கரவாதத் எதிர்ப்பு சட்டமூலம் ……………………………………………11

மரண விசாரணை சம்பந்தமான சட்ட வரைவு …………………………………13

இடைக்கால நிவாரணம் ………………………………………………………14

**3. விசாரணைகளும் ஆய்வுகளும்** ……………………………………………15

மன்னார் பாரிய மனிதப் புதைகுழி ……………………………………………16

பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சி பாதுகாப்பு …………………………………18

முறைப்பாடுகள் ……………………………………………………………18

காணாமற்போன ஆட்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர்கள் பற்றி தற்போது இருக்கும் தரவுகளை கூட்டிணைப்பது ……………………………………………18

தரவுதளம் ……………………………………………………………………19

**4. நிறுவன அபிவிருத்தி**……………………………………………………20

அலுவலகங்களை அமைத்தலும் ஊழியர் பணிக்கமர்த்தப்படுவதும் ………………20

நடைமுறைகளையும் விதிகளையும் அபிவிருத்தி செய்தல் ………………………21

உள சமூக ஆதரவு……………………………………………………………23

திறன் அபிவிருத்தியும் அறிவு பகிர்தலும் ………………………………………23

**5. வெளித்தொடர்பு** …………………………………………………………25

2018 பொது நிகழ்ச்சிகள் ……………………………………………………28

ஊடகவியலாருடனான இணைப்பு ………………………………………………28

டிஜிட்டல் பிரசன்னம் …………………………………………………………29

**6. நினைவேந்தல்களும் நினைவுச்சின்னங்கள் அமைப்பதும்** …………………30

**7. நிதி செலவு அறிக்கை**……………………………………………………30

பின்னிணைப்பு A………………………………………………………………31

இடைக்கால அறிக்கை …………………………………………………………32

## சுருக்க விளக்கம்

| | |
|---|---|
| CoA | காணாமற்போனமைக்கான சான்றிதழ் |
| DMS | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் |
| HRC | மனித உரிமைகள் ஆணைக்குழு |
| ICRC | சர்வதேச செஞ்சிலுவை செயற்குழு |
| MNIR | தேசிய ஒருங்கிணைப்பு, நல்லிணக்க அமைச்சு |
| OMP | காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் |
| PSU | உளசமூக ஆதரவுப்பிரிவு |
| PTA | பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் |
| SCRM | நல்லிணக்க பொறிமுறைகள் ஒன்றிணைப்பு செயலகம் |
| UNDP | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் |

## தவிசாளரின் செய்தி

அறிமுகம்: 2016ம் ஆண்டு 14ம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டம் நிறைவேற்றப்பட்டமை, காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட நபர்கள் சம்பந்தமான உண்மையை நிலைநிறுத்துவதில் இலங்கை மேற்கொண்ட முயற்சிகளில் ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளது. இது அரசினால் ஏற்படுத்தப்பட்ட முந்திய பொறிமுறைகளைப் போலல்லாமல் ஒரு நிரந்தரமானதும் சுதந்திரமானதும் சிவில் யுத்தம், அரசியல் அமைதியின்மை, சிவில் கலவரங்கள், நபர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்படுதலின் விளைவுகளுக்குட்பட்டவர்களது நிலைமையை அறிந்து கொள்ளும் ஆணைக்குழுவாகும். OMP பெற்றுக்கொண்டுள்ள பணிப்பாணையானது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கோ பிராந்தியத்திற்கோ சமூகத்திற்கோ மட்டும் தனிப்பட்டது அல்ல. OMP நிறுவப்பட்டமையானது பல்வேறு சூழல்களில் நான்கு தசாப்தங்களாக பரவலான முறையில் காணாமல் ஆக்கப்பட்டமையை ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும் என்பதோடு ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்ட எமது நாட்டுக் குடிமக்களுக்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு என்பதை வெளிப்படையாக அங்கீகரிக்கும் செயலாகும்.

2018ம் ஆண்டு பெப்ரவரி 28ம் திகதியன்று OMP ஆணைக்குழுவினர் நியமிக்கப்பட்டதிலிருந்து மார்கழி 31ம் திகதிவரை OMP பல துறைகளில் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. குறிப்பாக அதன் அலுவலகத்தைச் செயற்பாட்டு நிலைக்குக் கொண்டு வருதல், காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்ப அங்கத்தவர்களோடு தொடர்பு கொள்ளல் ஆகியவை உள்ளடங்கும். மேலும் OMP முக்கிய சட்ட மற்றும் கொள்கை இடையீடுகளையும் உயர்நிலை தனிமனித புலனாய்வையும் விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளது.

நானும் என் சக ஆணையாளர்களும் எமக்கு முன்னுள்ள நம்பத்தகுந்ததும் நிரந்தரமானதுமான ஒரு நிறுவனத்தை கட்டியெழுப்பும் பணியின் பாரிய தன்மையையும் அவசரத்தையும் இனம் கண்டுள்ளோம். காணாமற்போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தம் குடும்பங்களின் சந்தேகங்களையும் அவநம்பிக்கையையும், சுதந்திரமான ஆணைக்குழு என்ற தனது பணிப்பாணையை அங்கீகரிக்காமையையும், முக்கிய அரச நிறுவனங்களின் அங்கீகாரத்தைப் பெறுவதில் உள்ள தாமதங்களும் உட்பட பல சவால்களை OMP சந்தித்தது. மேலும், OMP நிறுவனம் தாபிக்கப்பட்டதன் மூலமாக பரவலான காணாமல் ஆக்கப்படுதலை அங்கீகரித்திருந்தாலும், பொது மக்கள் மத்தியிலும் அரசினர் மத்தியிலும் அதன் முறைமையைப் பற்றிய புரிந்துணர்வை உருவாக்கவும் அதனால் ஆகும் மிகப்பாரிய சேதத்தையும் விளைவுகளையும் உணரவைத்து அக்காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களின்பால் அனுதாபத்தை உருவாக்கவும் பணியாற்றவுள்ளது.

OMP பணி நிறைவேற்றத்திற்கு சாதகமான சூழல் உருவாக்கப்படுவதற்கும் அது மீளவும் நிகழாதிருக்கவும் OMP விசாரணைகள், பயங்கரவாதத் தடுப்பு சட்டவாக்கம், காணாமற்போனவர்களுக்கான சான்றிதழ் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் சட்டம், ஆகிய சட்ட கொள்கை சீர்திருத்தங்களை பரிந்துரை செய்திருந்தது. காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்கள் எதிர்கொள்ளும் மிகப் பாரிய துன்பங்களை இனம் கண்டு அவற்றிற்கு நிவாரணமாக OMP தனது இடைக்கால அறிக்கையில் ஆறு நிவாரண பரிந்துரைகளைச் செய்து அவை 2019ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட அரசிடம் கோரியிருந்தது.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் பல்வேறு சின்னங்களான வழக்குகள் சம்பந்தமான தகவல்களைப் பெற்று அவற்றைப் பகுப்பாய்வு செய்தது. கடந்த 2018 ஆனி முதல் மன்னார் பாரிய மனித

புதைகுழி அகழ்வை அவதானிப்பாளர்களாக இருந்து பொதுமக்கள் நம்பிக்கையை உறுதிப் படுத்திக் கொள்ள வழிமுறைகளை முன்மொழிந்து விசாரணைகளுக்கு உதவி செய்ததோடு நிதியுதவியும் செய்தது. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு வழக்குத் தொடுக்கும் அதிகாரம் கிடையாது: எனினும் நீதியை நிலைநாட்டுவதையும் காணாமற்போன ஆட்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களது உரிமைகளை பாதுகாப்பதில் முக்கியமான அம்சமென்பதை நம்புகின்றது. இதனை மனதிற் கொண்டதாய் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது தனது இடைக்கால அறிக்கையின் பரிந்துரைகளைப் பின்தொடர்ந்து செயலாற்ற முன்வந்தது. இதன்படி ஆட்கடத்தல் மற்றும் அது போன்ற வழக்குகளில் விசாரணைகளும் வழக்குத் தொடரலும் தடையின்றி முன்னெடுத்துச் செல்லப்படலாம்.

மேலும் காணாமற் போனோர் சான்றிதழ் பெறுவதை இலகுவானதாக்க குடும்பத்தார் கோரிய தனிப்பட்ட வழக்குகளில் அப்படியான சான்றிதழ் அரச மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களில் அங்கீகாரம் பெற்றிட கா.போ.அ. இடையீடு செய்து காணாமல் போனவர்கள்-காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு தேவைப்படும் சேவையும் நலன்களும் பெற்றுக்கொள்ள உதவியுள்ளது. அதி உத்தமாரம் சனாதிபதி பொதுமக்களிடம் காணாமற்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய முறைப்பாடுகளை தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு (MNIR) இடம் கையளிக்குமாறு கேட்டுக்கொண்டார். தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு (MNIR), OMP அலுவலகத்திடம் 14,641 விண்ணப்பங்களைக் கையளித்தது. இம்முறைப்பாடுகளை முன்னெடுத்திட மையப்படுத்தப்பட்ட காணாமற்போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியல் ஒன்றினை உருவாக்க தற்காலிக தரவுளத்தை OMP உருவாக்கியது. இது எதிர்கால விசாரணைகளின்போது புரட்டிப் பார்க்கும் சேவையில் உதவும்

காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரை நினைவுகூரும் தனது முயற்சியில் ஒரு பகுதியாக OMP இலங்கையில் காணாமற்போன ஆட்களை அரசு தலைமையிலான முதலாவது நினைவு கூரும் தினமாக 2018 ஆவணி 30ம் திகதியன்று காணாமற்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோரின் 650 குடும்ப உறுப்பினர்களின் பங்குபற்றுதலோடு நடைபெற்றது.

இலங்கையில் நல்லிணக்கத்தை எட்டுவதற்கு காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களின் குடும்பங்கள் உண்மையையும் நீதியையும் நிலைநிறுத்துவதற்கான உரிமைகள் உணரப்பட வேண்டும். இக்குறிக்கோளினை நோக்கி கடந்த எட்டு மாதங்களாக OMP தன் பணிப்பாணையை முற்றிலும் நிறைவேற்றிட தகுந்த அத்திவாரத்தை இட்டுள்ளது. மேலும் அரச முகாமை நிறுவனங்களினதும் திணைக்களங்களினதும் முழு ஒத்துழைப்போடும் தனது செயற்பாட்டுக்களையும் கடமைகளையும் நிறைவேற்றிட வேண்டி நிற்கின்றது.

சாலிய பீரிஸ் (சனாதிபதி சட்டத்தரணி)
தவிசாளர்
காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

## 1. அறிமுகம்

1.1. 2016ம் ஆண்டு 14ம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) அலுவலகம் பற்றிய சட்டம் 2016ம் ஆண்டு ஆவணி மாதம் நிறுவப்பட்டது. OMP யின் ஏழு ஆணையாளர்களை அரசியலமைப்பு ஆலோசனை சபையினரால் பரிந்துரைக்கப்பட்டதன் பின்னர் ஆணையாளர்களாக மூன்று ஆண்டுகள் பதவி வகிக்க சனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்தார். அதி உத்தமராம் சனாதிபதி அவர்கள் 2018ம் ஆண்டு மாசி 28ம் திகதி திரு. சாலிய பீரிஸ் ச.ச. அவர்களை OMP தவிசாளராகவும், கலாநிதி நிமல்கா பெர்னாண்டோ, திரு. எஸ்.கே. லியனகே (சட்டத்தரணி), ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் திருமதி. மொஹாந்தி பீரிஸ், திருமதி.ஜெயதீபா புண்ணியமூர்த்தி, திரு.மிராக் றஹீம், திரு.கணபதிப்பிள்ளை வேந்தன் ஆகியோரை ஆணையாளர்களாக நியமித்தார்.

1.2. OMP அலுவலகமானது நபர்கள் காணாமல் போன சூழ்நிலைகளையும் அவர்தம் நிலைமையையும் விளக்கிடவும் தெளிவான பணிப்பாணையைப் பெற்றுள்ளது. காணாமற்போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர்களுக்கும் அவர்களது குடும்பத்தாருக்குமுரிய உரிமைகளும் நலன்களும் பாதுகாக்கப்படல் வேண்டும்; காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களுக்கான முறையான அதிகாரிகளிடம் அவை மீண்டும் நிகழாதிருப்பதற்கான பரிந்துரைகள் செய்யப்பட வேண்டும்; காணாமற் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் மற்றும் அவர்கள் உறவினர்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க வேண்டும்; காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோருக்கு இழப்பீடு செய்திடும் வழிமுறைகள் இனங்காணப்பட வேண்டும்; தரவு தளத்தில் இருக்கும் வளங்களிலிருந்து காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் பற்றி தற்போதிருக்கும் தரவுகளைச் கூட்டிணைத்து முறைப்படுத்தல் வேண்டும்.[2]

1.3. காணாமற்போனமைக்கான சான்றிதழை பதிவாளர் நாயகம் தருவதற்கு உதவியாக உறவினர்களுக்கு இடைக்கால அறிக்கை தருவது உட்பட விரிவான பணிகள் பல நிறைவேற்றிட OMP பணிக்கப்பட்டுள்ளது; காணாமல் போனவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் உளசமூகவியல் ஆதரவு உட்பட நிர்வாக உதவி தந்துதவுவதிலோ பெற்றுதவவோ வசதியேற்படுத்தல்; காணாமற்போன நபருக்கோ அல்லது அவரது உறவினர்க்கோ இழப்பீடு கிடைப்பதற்கேதுவாக பொருத்தமான அதிகாரியிடம் பரிந்துரைத்தல்; பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சி பாதுகாப்பு வழிமுறையை உருவாக்கி அதனை அமுல்படுத்துதல்; காணாமற் போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்ட்டோர் பற்றிய எல்லா விபரங்களும் அடங்கிய தரவு தளம் ஒன்றை உருவாக்கி, முகாமை செய்து, பராமரித்தல்; காணாமற்போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களுக்கேற்பட்ட தீங்குகளையும் வேதனைகளையும் பொதுமக்கள் புரிந்து கொள்ளும் தன்மை கொண்டு பொதுமக்கள் அவர்கள் பால் ஆதரவை அதிகரிக்கச் செய்து அவர்களது தேவைகளை

பொருளாதார, உள சமூக, சட்ட மற்றும் நிரவாக ஆதரவை பெற்றிட வசதியேற்படுத்தல் ஆகியவை அதன் பணிகளாகும்[3]

1.4. OMP அலுவலகத்திற்கு பால்நிலை உணர்வு நுட்பத்துக்குரிய விதிகளை உருவாக்க, வழிகாட்டுதல்களை அபிவிருத்தி செய்ய, ஊழியர்களை நியமிக்கவும் பதவி விலக்கவும், தன் செயற்பாட்டினை உறுதிப்படுத்தவும் பொதுவான அதிகாரம் உண்டு. மேலும் OMP பரந்துபட்ட பல விடயங்களை இதர அரச அதிகாரிகளுக்கும் அரச அதிகாரங்களுக்கும் எதிர்கால காணாமல் ஆக்கப்படுதல்களை தடுத்திட பரிந்துரை செய்வதும் நினைவேந்தல்கள் நிகழ்த்தும் முறைமைகள் மற்றும் காணாமல் ஆக்கப்படுதலை ஏற்றுக்கொள்வதும்; அடையாளம் காணப்பட்ட அல்லது அடையாளம் காணப்படாத மனித எச்சங்களைக் கையாளுதல்; பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் பற்றிய தவல்களை பிரசுரித்தல்; காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக தேசிய சட்டங்களையும் விதிமுறைகளையும் அபிவிருத்தி செய்திடல்; காணாமற்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களுக்கும் மற்றும் அவர்கள் உறவினர்களுக்கும் இழப்பீடு உளசமூக ஆதரவு வழங்குதல் மற்றும் இதர சமூக பொருளாதார நிலைகளை அவிவிருத்தி செய்யவும் அதிகாரம் உண்டு[1]

1.5. விசாரணைகளை நடத்தும்படியாக OMP அலுவலகத்திற்கு முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளவும் விசாரிப்புகளை ஆரம்பிக்கவும் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர்கள் இருக்குமிடத்தை விசாரித்தறியவும் குறிப்பிட்ட அதிகாரம் உண்டு. OMP வழக்குகளை விசாரித்தறியவோ தனக்கு முன் எந்த ஒரு நபரையோ, எந்த ஒரு ஆவணத்தை சமர்ப்பிக்கவோ, வேறெதனையும் கொண்டு வந்து சமர்ப்பிக்க வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவோ; இரகசிய தகவல் ஏற்றுக்கொள்ள அல்லது தனியான இடத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளவோ: இரகசியபூர்வமான தகவல்களை தனியறையில் பெற்றிடவோ: இரகசியத்தன்மை நிபந்தனையுடன் கூடிய தகவல் பெற்றிடவோ; புதைகுழி அகழ்வு செய்திடவோ, மனித எச்சங்களை தோண்டியெடுக்கவோ ஒரு நீதவான் நீதிமன்றில் உத்தரவு பெற விண்ணப்பிக்கவோ; அதில் அவதானிகளாயிருக்கவோ, எந்த ஒரு அரச அமைப்பிடமிருந்தும் உதவி வேண்டிக் கேட்கவோ; தடுத்துவைக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு இடத்தையும் பரிசோதித்துத் தேடுதலை நீதிமன்ற ஆணை இல்லாமல் செய்யவோ, எந்த சட்ட அமுலாக்கல் அல்லது வழக்குத் தொடுக்கும் அதிகாரத்திற்கு எதிரான ஒரு குற்றச் செயலையும் அறிக்கையாக அறிவிக்கவோ அதிகாரத்தை கொண்டுள்ளது.[2]

OMP அதிகாரத்திற்கு எதிராக குற்றமிழைத்தவர் என ஒருவரை, அவர் OMP முன் தோன்ற தவறுகிறார் என்றோ, ஒரு ஆவணத்தையோ வேறெதனையோ தரத் தவறுகிறர் என்றோ, அவரை அழைப்பாணை வழங்கி அழைத்தபின் அவர் OMP முன் வரத் தவறுகிறார் என்றோ காரணமின்றி கேள்விகளுக்குப் பதிலிறுக்கத்தவறுகிறார் அல்லது எழுத்துமூலம் அவருக்கு வழங்கப்பட்ட அறிவித்தலையோ கட்டளையையோ மறுக்கின்றார் என்றோ OMP அதிகாரி

[1] OMP சட்டம், பிரிவு 13(1) (k).
[2] OMP சட்டம், பிரிவு 12.

ஒருவரை அவர் தம் அதிகாரத்தை நிறைவேற்ற எதிர்க்கவோ அல்லது தடுக்கவோ செய்கின்றார் என்றோ OMP பணியை அறிந்தே தடை செய்கிறார் என்றோ பல காரணங்கள் உட்பட அவரைக் குற்றம் சாட்டிட முடியும் [3]

1.6. OMP தனது பணிப்பாணையின் செயற்பாட்டினை காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் உரிமைகளையும் நலன்களையும் மையமாகக் கொண்டு அமைத்திட விழைகின்றது. மேலதிகமாக OMP தனது செயற்பாட்டினையும் கடமையையும் மேற்கொள்ளும்போது சட்டத்தின் மேலாண்மையைக் கைக்கொள்வதோடு தற்போது இருக்கும் சட்டங்களையும் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்தவே செய்கிறது.

## 2. சட்ட மற்றும் கொள்கை இடையீடுகள்

2.1. OMP அலுவலகம் காணாமற் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் பற்றி பரிந்துரை செய்யவும் அவர்களுடையதும் அவர்களது உறவினர்களதும் உரிமைகளப் பாதுகாத்து செயற்படவும் வெளிப்படையான தெளிவானதொரு பணிபாணை பெற்றுள்ளது [4] மேலும் காணாமற் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர்களின் குடும்பங்களை அணுகுவதை இலகுவாக்கி அவர்களது பொருளாதார, உளசமூகவியல், சட்ட, நிர்வாக அலுவல்கள் காரணமாக ஆதரவளிக்கவும் பணிக்கப்பட்டுள்ளது. [5] OMP அலுவலகத்திற்கு அரச அதிகார நிலைகளுக்கு எதிர்காலத்தில் காணாமல் ஆக்கப்படுதல், மனித எச்சங்களைக் கையாளுதல், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள், மற்றும் அவர்களது உறவினர்களது சமூக பொருளாதார நிலைகளை மேம்படுத்தல் எனும் பல விடயங்கள் பற்றி பரிந்துரை செய்யும் அதிகாரம் உண்டு. [6] தனது இப்பணிகளில் தன் பணிப்பாணையை நிறைவேற்றிட சட்ட கொள்கை கட்டமைப்பு சாதகமாக இருப்பதை OMP உறுதி செய்து கொள்வது அவசியமாகும்.

2.2. காணாமல்போனமைக்கான சான்றிதழ் பற்றிய முக்கிய சட்ட சீர்திருத்தங்களும் கொள்கை இடையீடுகளும் மரண விசாரணை பற்றிய சட்ட வரைவு, வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் சட்டம், பயங்கரவாதத்திற்கு எதிரான சட்ட முன்மொழிவு OMP யினால் பரிந்துரை செய்யப்பட்டது. இந்த இடையீடுகள் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் மீண்டும் நடைபெறாதிருப்பதை இலகுவாக்கவும், காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களின் உரிமைகளையும் நலன்களையும் பேணுதல் ஆகியவற்றிலிருந்து விரிவான சட்ட கட்டமைப்பில் வெளிப்படையாக OMP அலுவலகத்தை அங்கீகரித்து அதன் பணியை நிறைவாக்குவதுமாகும்.

---

[3] OMP சட்டம், பிரிவு 24.
[4] OMP சட்டம், பிரிவு 2(b), 10.
[5] OMP சட்டம், பிரிவு 13 (e), (f).
[6] சட்டம், பிரிவு 13(k)(i),(iii),(vii).

## காணாமல் போனமைக்கான சான்றிதழ்

2.3. இலங்கை அரசாங்கம் மரண பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்) 2016ம் ஆண்டின் 16ம் இலக்க சட்டத்தை நிறைவேற்றியமை காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் காணாமற்போனமைக்கான சான்றிதழ் பெறுவதற்கு வசதியாக அமைந்துள்ளது. காணாமற்போனமைக்கான சான்றிதழ் என்பது காணாமல்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களது சட்டபூர்வ நிலையை உறுதிப்படுத்தி அவர்களின குடும்ப உறுப்பினர்கள் காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் மரண சான்றிதழ் இல்லாத நிலையில் நிர்வாக மற்றும் நிதி சேவைகளிலும் இதர விடயங்களிலும் அனுகூலம் பெறமுடியும். OMP அலுவலகத்தின் பணிப்பாணைக்கமையை அவர்களது இடைக்கால அறிக்கைகளை காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்குக் வழங்கி அவர்கள் காணாமற் போனமைக்கான சான்றிதழை பதிவாளர் நாயகம் அலுவலகலத்தில் பெற்றிட முடியும்.[7]

2.4. வடக்கு கிழக்கு மோதல்கள், அரசியல் அமைதியின்மை, சிவில் அமைதிகுலைவு, வலிந்து காணாமற் ஆக்கப்படுதல் ஆகிவை சம்பந்தமாகவோ, ஆயுதப்படை அல்லது பொலிஸ் உத்தியோகத்தரின் செயற்பாட்டின்போது காணாமற் போனாலோ அல்லது காணாமல் ஆக்கப்பட்டாலோ காணாமற்போனமைக்கான சான்றிதழ் வழங்கப்படுகின்றது [8] OMP காணாமற்போனோர் மற்றும் காணாமல் ஆக்கபபட்டவர் குடும்பங்களோடும் பொதுமக்களோடும் கலந்துரையாடி காணாமற்போன சான்றிதழைப் பெறும் வழிமுறையையும் அதன் செல்லுபடித் தன்மையும் அவர்கள் புரிந்துணர வகை செய்கின்றனர்.

2.5. எனினும் காணாமற் போனமைக்கான சான்றிதழ் பெற்றுக்கொண்ட பல குடும்பத்தார் உள்ளுராட்சி சபைகள், வங்கிகள், இதர நிதி நிறுவனங்கள், வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் ஆகியோருடன் செயற்படும்போது காணாமற் போன சான்றிதழைப் பற்றிய புரிந்துணர்வு இல்லாததனால் அல்லது அதன் செல்லுபடித்தன்மை மற்றும் நோக்கம் பற்றிய தெளிவில்லாமையால் கஷ்டத்தை எதிர்நோக்குவதற்கான காரணம் அந்நிறுவனங்கள் காணாமற் போன சான்றிதழை ஏற்றுக்கொள்ள மறுப்பதுவே. OMP பாதிக்கபட்டக் குடும்பங்களோடும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் உரையாடல்களை மேற்கொண்டு, கொள்கை சீரத்திருத்தங்களை அடையாளம் கண்டு காணாமற்போனமைக்கான சான்றிதழ் தொடர்புடைய தனிப்பட்டோர் முறைப்பாடுகளுக்குப் பதிலிறுக்க இடைப்பட்டது.

2.6. குடும்பங்கள் சார்பாக OMP உள்ளுர் வங்கிகளில் காணாமற்போன சான்றிதழை வைத்து வங்கி சேவைகளைப் பெற்றுக்கொள்வது பற்றிய முறைப்பாடுகளையிட்டு இடைப்பட்டது. மேலதிகமாக நிதி நிறுவனங்கள் தம் ஒழுங்கு கடமைப்பாடுகளில் காணாமற்போன சான்றிதழை ஏற்றுக் கொள்வதில் முரண்பாடு ஏற்படலாம் எனக் கூறிட, இவ்விடயமாக OMP மத்திய வங்கி ஆளுநருடன் உரையாடலைத் தொடங்கியது.

[7] சட்டம், பிரிவு 13(1)(a).

[8] 2016 மரண பதிவு(தற்காலிக ஏற்பாடுகள்)(திருத்தம்) சட்ட இலக்கம் 16 – பிரிவு, Section 8A.

2.7. மரண சான்றிதழ் இல்லாத நிலையில் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்கள் தாம் வீசாவுக்கு விண்ணப்பிக்கும் போது சந்திக்கும் கஷ்டத்தைப் பற்றி OMP யிடம் பிரதிதித்துவம் செய்ய, அதற்கு பதிலிறுக்கும் முகமாக OMP இடைப்பட்டு வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கும், இலங்கையில் நிறுவப்பட்டுள்ள எல்லா வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கும் காணாமற்போன சான்றிதழின் காரணத்தையும் பெற்றோர், குழந்தை காணாமல் போனமை மற்றும் காணாமல் ஆக்கபட்டமையினால் காணாமற் போனமைக்கான சான்றிதழின் செல்லுபடித்தன்மையையும் விளக்கியுள்ளது.

2.8 மேலும் காணாமற் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் OMP அலுவலகத்திற்கு தாம் காணாமல் போனமைக்கான சான்றிதழைப் பெற்றிட தேவைப்படும் ஆவணங்களை தம் பிராந்திய பதிவாளரிடமிருந்து பெறுவதில் உள்ள கஷ்டங்களை சுட்டிக்காட்டினர். இதனால் தேசிய மற்றும் உள்ளூராட்சி மட்ட அரச உத்தியோகத்தர் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்த OMP அலுவலகம் நல்லிணக்க பொறிமுறைகளை கூட்டிணைப்பதற்கான (SCRM) செயலகத்துடன கலந்தரையாடல்களை ஆரம்பத்துள்ளது.

## வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் சட்டம்

2.9. 2017 மார்கழி 10ம் திகதி எல்லா ஆட்களையும் வலிந்து காணாமல் ஆக்கப்படுதலிலிருந்து பாதுகாக்கும் சர்வதேச உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டது. இந்த உடன்படிக்கை யின் கீழ் வரும் கடப்பாடுகளை உள்நாட்டுச் சட்டத்திற்குள் கொண்டுவர 2018ம் ஆண்டின் 5ம் இலக்க சட்டம் (வலிந்து காணாமல் ஆக்கப்படும் சட்டம்) நிறைவேற்றப்பட்டது,

2.10. இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதன்படி, வலிந்து காணாமல் ஆக்கப்படல் குற்றச் செயலாக ஆக்கப்பட்டமை தண்டியாமை நிலைக்கு எதிரான போராட்டத்தில் ஒரு வரவேற்கத் தக்க சாதனையாகும். ஆயினும், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் பற்றிய உள்நாட்டுச்சட்டத்தின் வரைவிலக்கணமானது இக்குற்றச் செயலின் தன்மையை இனம்காணத் தவறுகின்றது. இதற்கான காரணம் அதில் உள்ள சில விடயங்கள் வெளிப்படையாக ‘வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் சட்டம்’ நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் நிகழ்ந்தமையே. இச்சட்டமானது சம்பந்தப்பட்ட விடயத்தில் குற்றமிழைப்பதில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள் முழுமையாக உள்ளடக்கப்படவில்லை. அத்தோடு வலிந்து காணாமல் ஆக்கப்படும் குற்றச் செயலானது ‘கட்டளைப் பொறுப்பு’ (Command Responsibility) சம்பந்தமாக அடையாளம் காண தவறவிட்டது. மற்றும் இச்சட்டமானது வலிந்து காணாமல் ஆக்கப்படுதலை மனித இனத்திற்கு எதிரான குற்றமாகக் கருதப்படாததுடன், HRC ஆணைக்குழுவிற்கும் மேலதிகமாக OMP பணிப்பாணையின் மூலமாகவும் காணாமற்போன மற்றும் காணாமற்போன ஆட்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதை போதுமான அளவிற்கு அங்கீகரிக்கவில்லை என்பதாகும்.

2.11. மேன்மைத்தங்கிய சனாதிபதி அவர்கள், மதிப்பிற்குரிய பிரதமர், சட்ட மா அதிபர், நீதி மற்றும் சிறைச்சாலை சீர்திருத்த அமைச்சர் ஆகியோர் உட்பட அரச அதிகாரிகளுக்கு மேற்குறிப்பிட்ட சட்ட திருத்தங்களை நிறைவேற்ற OMP பரிந்துரை செய்துள்ளது.

## தடுத்தல்

2.12. வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் சுதந்திரத்தை இல்லாது செய்வதை மையமாகக் கொண்டிருக்கின்றபடியால் சுதந்திரத்தை இல்லாதொழிக்கும் விடயங்களில் கடுமையான சட்ட அமைப்பை நடைமுறைப்படுத்துவதே அவை மீண்டும் நிகழாதிருக்க பாதுகாப்பு முறைமையாகும். தனது இடைக்கால அறிக்கையில் OMP தற்போது தொடர்ந்தும் தன்னிச்சையான கைதுகள் நடைபெறுவதையும், தடுத்துவைக்கப்பட்டவர்கள் முறையற்ற விதத்தில் நடத்தப்படுவதையும் கைது செய்யப்பட்டிருப்போருக்கு சித்திரவதையும் மரணமும் நடைபெறுவதையும் அவதானித்துள்ளது.

2.13. தடுப்பில் உள்ள ஆட்கள் மீது செய்யப்பட்டதாகக் கூறப்படும் துஷ்பிரயோகங்களை விசாரணை செய்யவும், கைதுகள் செய்யப்படும்போதும் தடுத்து வைக்கப்படும்போதும் முறையான வழிமுறைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என OMP பொலிஸ் மா அதிபருக்கு பரிந்துரை செய்தது. மேலும் பொலிஸ்மா அதிபரிடம் தடுப்பு நிலையங்களின் முழு பட்டியலையும் தடுத்து வைத்திருப்பவர்களின் விபரங்களையும் பிரசுரித்து எந்த நபரும் எந்த அதிகாரபூர்வமற்ற தடுப்பு நிலையங்களில் இல்லாதிருப்பதை உறுதி செய்து கொள்ள பரிந்துரை செய்தது.

2.14. மேலதிகமாக பாதுகாப்புச் செயலாளரிடம் இலங்கை இராணுவம், கடற்படை, ஆகாயப்படை தளபதிகளுக்கு அவர்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ள குற்றம்சாட்டப்பட்டுள்ள ஆட்கள், ஆயுதப்படை தடுப்பு முகாமில் இருப்போர் மீது துஷ்பிரயோகங்களை விசாரணை செய்வதற்கு OMP அலுவகத்திற்கு தம் முழு ஒத்துழைப்பை தந்துதவுமாறு உத்தரவிடுமாறும் பரிந்துரை செய்துள்ளது. மேலும் பாதுகாப்புத் துறையினர் தாம் தடுத்து வைத்திருப்போர் மீது முறையான முன்னெடுப்புக்கள் கொண்டுவரவேண்டும் என்றும் அவர்களது தடுப்பு பற்றிய பதிவுகள் சட்டத்தின் முழு முறைமையின்படி வைத்திருக்கப்பட வேண்டும் என OMP பரிந்துரைத்தது.

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்

2.15. 2018 ஐப்பசி மாதம் அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை அகற்றி அதற்குப் பதிலாக பயங்கரவாதத் எதிர்ப்பு சட்டமூலம் எனும் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தது. பயங்கரவாத தடுப்பு சட்டம் அகற்றப்படும் தீர்மானத்தையும் தன்னிச்சையான தடுப்புக்களுக்கு எதிரான பாதுகாப்பு அம்சங்களை முன்மொழியப்பட்ட சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதையும் OMP வரவேற்றுள்ளது.

2.16. கடந்தகால விசாரணை ஆணைக்குழுக்களின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் காரணமாகவும் அத்துடன் இலங்கை உலகின் இரண்டவது அதிகமான காணாமற்போனமையை கொண்டுள்ள நாடு என அறியப்படுவதினால் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தேசிய பாதுகாப்பிற்கும் அடிப்படை உரிமை பாதுகாப்பிற்கும் இடையே பொருத்தமானதொரு சமநிலையை பேணுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.

2.17. வலிந்து காணாமல் ஆக்கப்படுதலைத் தடுத்து காணாமல் போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்படும் நிகழ்வுகள் குறைக்கப்பட வேண்டுமெனின், தடுத்து வைக்கப்படுவோர் எச்சந்தர்ப்பத்திலும் கணக்கில் எடுக்கப்படுவது முக்கியமானதாகுமென OMP வலியுறுத்தியுள்ளது. மேலும், உறுதியானதொரு திட்ட வழிமுறையின்படி எத்தனைபேர் தடுக்கப்பட்டுள்ளனர் என கருத்திற்கொண்டு அவர்களை கண்காணிக்கும் நபரோ, முகவரோ கட்டுப்பாட்டுக்கு மீறிய அதிகாரம் கொண்டுள்ளவராக இல்லாதிருப்பதை உறுதிசெய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது. கைது செய்யக்கூடிய அதிகாரங்களை வரையறை செய்வதுடன், தடுப்பாணைகள் மூலமாக தடுத்து வைக்கப்படும் சூழ்நிலைகளில் சட்ட அலுவலரின் கண்காணிப்பின்கீழ் தடுத்து வைக்கப்படுதல், தடுத்து வைக்கப்பட்டவர்கள் குடும்ப உறுப்பினர்களையோ, சட்ட பிரதிநிதிகளையோ அணுகும் உரிமைக்கு உத்தரவாதமளித்தல், இரகசிய தடுத்து வைத்தலை இல்லாதாக்குதல் ஆகியவை தடுத்து வைக்கப்பட்டோரது பாதுகாப்பிற்கும் தீங்கின்மைக்கும் இன்றியமையாததாகும்.

2.18. OMP மேன்மைத்தங்கிய சனாதிபதியிடமும் மதிப்பிற்குரிய பிரதம அமைச்சரிடமும் பல விடயங்களை பற்றிய எடுத்துரைத்து தன் கரிசனைளைத் தெரிவித்து பயங்கரவாத எதிர்ப்பு சட்டவரைவில் கீழ்க்காணும் விடயங்களை பரிந்துரைத்தது.

a) உயர் பதவியில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஆணையிடப்பட்ட அதிகாரிகளும் அதே ஒப்பிட்ட நிலையில் உள்ள இராணுவ, கடற்படை, ஆகாயப்படை மற்றம் கரையோரக் காவற்படை ஆணையிடப்பட்ட அதிகாரிகள் மட்டுமே பிடியாணை இன்றி கைது செய்ய அனுமதிக்க வேண்டும்.[9]

b) தடுத்துவைக்கும் அதிகாரத்தை உப பொலிஸ் அதிபர்கள் சுயாதீனமாக செயற்படுவதை தவிர்க்க, அவர்கள் நீதித்துறை அதிகாரிகளிடம் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அவ்வதிகாரம் நீதித்துறை அிகாரிகளின் மீள்பரிசோதனைக்கும் உட்பட்டதாயிருக்க வேண்டுமென்றும் பரிந்துரைத்துள்ளது.[10]

c) 2016ம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது மற்றும் தடுத்து வைத்தல் சம்பந்தமாக (மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில்) மேன்மைத்தங்கிய சனாதிபதியினால் பயங்கரவாத எதிரப்பு சட்டமூலத்தில் உள்ளடங்கிய பொருத்தமான பாதுகாப்பு அம்சங்கள், பயங்கரவதத் தடுப்பு சட்டவரைவிலும் உள்ளடக்கப்பட வேண்டும்.[11]

---

[9] காண்க பயங்கரவாத எதிர் சட்டமூலம், பிரிவு 17.

[10] காண்க பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், பிரிவு 31(1), 41

[11] See Directives Issued by His Excellency Maithripala Sirisena on Arrest and Detention Under the Prevention of Terrorism (Temporary Provisions) Act No. 48 of 1979 (2016).

d) சட்டத்தின் 48(1) பிரிவில் பொறுப்பிலிருக்கும் அதிகாரியின் விருப்பின்படி என்பதைத் திருத்தி, சந்தேகப்படுபவர் உடனடியாக அவரது குடும்பத்தையும் ஒரு சட்ட பிரதிநிதியையும் தொடர்பு கொள்ள வசதியளித்தல் என்பதை உள்ளடக்கி உறுதிசெய்தல் வேண்டும்[12]

e) மேலும், தடுத்து வைக்கப்படுமிடமானது ஒரு தடுத்து வைக்கப்படுமிடமாக அல்லாமல் மூடிடப்படுமிடத்து அப்படியாக அது முடிவு செய்யப்பட்ட பதினான்கு நாட்களுக்கு முன்னதாக வர்த்தமானியில் அறிவிக்கப்படவேண்டும்[13]

f) கைது செய்யப்பட்டமை மற்றும் துல்லியமான அவ்வவ்வேளைக்குரிய முறையில் தடுத்து வைத்தல் பற்றி பதிவுகள் ஏற்படுத்தப்படாமலிருப்பதை குற்றச் செயல் என்று சட்டப்பிரிவை உள்ளடக்க வேண்டும்.[14]

g) OMP யின் அதிகாரங்களுக்கும் பணியாற்றலுக்குமிணங்க 26(3)ம் பிரிவை திருத்தி பொலிஸ்மா அதிபர் தகவலை OMP அலுவலகத்திற்கு OMP அல்லது HRC வேண்டும்போது கொடுக்கவும், அதிகாரம் பெற்ற OMP அலுவலர் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பு இருக்குமிடத்திற்கு விஜயம் செய்யும் முகமாக பிரிவு 34 ஐ திருத்திடவேண்டும்.[20]

h) பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் கருத்துவேறுபாட்டு எதிர்ப்புக்களை அடக்குவதற்குப் பயன் படுத்தப்படாதிருக்க, குறிப்பாக குடும்பங்களின் பணிகளும் மனித உரிமை காவலர்களும், பயங்கரவாதம் என அழைக்கப்படுகின்ற செயல்களை மீளாய்வு செய்து, சட்ட மூலத்தின் விசேட சரத்துக்களுக்கு வலுவூட்டி, சட்டபூர்வமான மனித உரிமை செயற்பாடுகளை பயங்கரவாத நடவடிக்கைகள் என கருதப்படலாகாது என உறுதிப்படுத்த வேண்டும்.[15]

i) விதிமுறை உத்தரவுகள், வரையரை உத்தரவுகள், ஊரடங்கு உத்தரவுகள், எந்த பொது அல்லது தனியார் இடத்தினை தடை செய்யப்படுமிடமாக அறிவிக்கும் உத்தரவு, ஆயுதப் படையினை வெளிக்கொணர ஏற்படுத்தப்படும் அறிவிப்பு, தேவைக்கேற்ற முறையில் விகிதாசார அடிப்படையிலும் நடைபெற்றிட அதிகாரத்தை மட்டுப்படுத்தல். [16] இத்தகைய உத்தரவுகளில் ஒன்றோ, ஒன்றுக்கு மேற்பட்டவையோ, அப்படி தடுத்துவைக்கப்பட்ட ஆளையோ அல்லது அப்படித் தடுக்கப்பட்ட இடத்தினையோ HRC, OMP அல்லது ஒரு நீதவான் அணுகுவதைக் மட்டுப்படுத்தலாகாது.

[12] காண்க பயங்கரவாத எதிர் சட்டமூலம், பிரிவு 48(1), 44.

[13] காண்க பயங்கரவாத எதிர் சட்டமூலம், பிரிவு 31(6).

[14] See Office on Missing Persons, Interim Report (2018), Para 47(f); Final Report of the Commission of Inquiry into Involuntary Removal or Disappearances of Persons in the Western, Southern and Sabaragamuwa Provinces, Sessional Paper No. V (1997), 114-115; Final Report of the Commission of Inquiry into Involuntary Disappearance of Certain Persons (All Island) Sessional Paper No-1 (2001), 24-25.

[15] காண்க பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், பிரிவு 3, 4, 5, 6(b),(d), 8,10.

[16] காண்க பயங்கரவாத எதிர் சட்டமூலம், பிரிவு 81(1), 82(1), 83(1), 84(1), 85(1).

## மரண விசாரணை சம்பந்தமான சட்ட வரைவு

2.19. 2018 புரட்டாதி மாதத்தில் OMP 'சட்ட சீர்திருத்த குழு, மரண விசாரணைகளை மேற்கொள்கையில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளும் நடைமுறைகளும் சம்பந்தமான சட்ட சீர்திருத்தம்' பற்றி நீதி மற்றும் சிறைச்சாலை சீர்திருத்த அமைச்சிடம் OMP முன்மொழிந்தது. மரண விசாரணை பற்றிய சட்ட சீர்திருத்தமனாது மனித எச்சங்களைக் கையாளுவதில் உள்ள சட்ட கட்டமைப்பில் உள்ள இடைவெளிகளை நிரப்ப வேண்டும் என்பதோடு OMP அலுவலகம் தன் மனித எச்சங்களை அடையாளம் காண்பதை உதவி செய்யும் பணியையும் விசாரணைகளை மேற்கொள்ளும் பணிப்பாணையையும் தொடர்ந்து செய்ய எடுத்துரைத்தது.

2.20. மரண விசாரணைகள் பற்றிய சட்டவாக்க நிறைவேற்றலை விரைவுபடுத்தவும் முன்னுரிமை ஒழுங்குமரபு மற்றும் தரமான செயற்பாட்டு வழிமுறைகளை நிலைநிறுத்தவும் OMP அழுத்தம் கொடுத்தது. இதன்படி தற்போதுள்ள சட்ட வழிமுறைகளில் உள்ள பாரிய இடைவெளிகள் இல்லாது போகும். மரணம் ஏற்பட்டிருக்கும் என ஊகிக்கும் சாட்சிய பளுவை குறைத்திட OMP பரிந்துரை செய்தது: பாரிய மனித மற்றும் இயற்கை அனர்த்தங்களால் வரும் மரண விசாரணையை நீதவான் நீதிமன்றம் நிறைவேற்றும் அதிகாரத்தைத் தம்முடன் வைத்திருந்து, அவசியமனால் அதனை உயர்நீதி மன்றத்தின் பார்வைக்குட்படுத்தல்: அடையாளம் காணப்படா மனித எச்சஙகள் சம்பந்தமாக நீதவான் நீதிமன்றம் OMPயின் உதவியை நாட இடமளித்தல், புதைக்கப்படுவதற்கு முன் உயிரியல் மாதிரி எச்சங்களைப் பாதுகாக்கப்பட நியாயமான அளவு நடவடிக்கை எடுத்தல் போன்றவையே அவையாகும்

## இடைக்கால நிவாரணம்

2.21. தன் இடைக்கால அறிக்கையில் OMP காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களின் குடும்பங்களுக்கு, அவர்கள் தாம் அன்பு செய்தவர்கள் இல்லாத காரணமாக கதியற்ற நிலையிலிருப்பதால் அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் அளிக்க வேண்டும் எனப் பரிந்துரை செய்தது. அத்தகைய இடைக்கால நிவாரணமானது அவர்களது உடனடியான தேவைகளைச் சந்திப்பதாக இருக்கவேண்டியதேயல்லாமல் இழப்பீட்டிலிருந்து வேறுபட்டதாகக் கருதப்படவேண்டும். 2018ம் ஆண்டின் இல. 34 ஆகிய சட்டம் நிறைவேற்றப்படுவதை வரவேற்று காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு, அவர்களுக்கேற்பட்ட பலியாக்கப்பட்டதற்கான முழு இழப்பீடு கொடுப்பதற்கான அரசாங்கத்தின் கடமைப்பாட்டையும் OMP வலியுத்துகின்றது.

2.22. கீழ்க்காணும் இடைக்கால நிவாரண கொடுப்பனவு அளவு 2019 வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என OMP தனது இடைக்கால அறிக்கையில் பரிந்துரை செய்தது.

a) **நிதி உதவித் திட்டம்:** நிரந்தர வருமானம் ஏதுமின்றி காணாமற்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவரின் உயிரோடிருக்கும் வாழ்க்கைத் துணைக்கோ, உயிரோடிருக்கும்

குழந்தைகளுக்கோ அல்லது உயிரோடிருக்கும் பெற்றோருக்கோ மாதாந்திர கொடுப்பனவாக ரூ 6000 நிதியுதவி அளிப்பதை நடைமுறைப்படுத்த வேண்டும். இது ஓர் இடைக்கால கொடுப்பனவாக கருதப்பட்டு இறுதி இழப்பீடு வழங்கப்படும் போது நிறுத்தப்படும்.

b) **கடன் நிவாரணத் திட்டம்:** காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்பங்களை தனியொரு முன்னுரிமை குழுவாக உள்ளடக்குதல் (அ) கடன் நிவாரண திட்டமாக கடனை முழுமையாக தள்ளுபடி செய்தல் (உதாரணம்: நுண் நிதியுதவி) (ஆ) நிதியுதவி நிகழ்ச்சிகள் மற்றும் நிதி அமைச்சின் "என்ரபிரயிஸ் சிறி லங்கா": போன்ற பொருளாதார ஸ்திரத்தன்மையையும் தம்மில்தாமே தங்கியிருப்பதை இலக்காகக் கொண்ட கடன் திட்டங்கள்

c) **வீடு அபிவிருத்தித் திட்டம்:** வீடமைப்பு அமைச்சின் கீழ் தற்போதுள்ள வீடமைப்பு திட்டத்தின் கீழ் காணாமற் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு விசேட முன்னுரிமை பிரிவின் கீழ் வசதியளித்தல்: நிரந்தர வீடமைப்புக்கள் அடங்கிய புதிய வீடமைப்புத் திட்டங்கள் அல்லது பகுதி மட்டும் கட்டப்பட்ட வீடுகளை முழுமையாக கட்டுவதற்கான நிதியுதவி அளித்தல்.

d) **கல்வி உதவித் திட்டம்:** காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குழந்தைகளுக்குக் கல்வி அமைச்சின் கீழ் மாதாந்தம் ரூ 2,000 உதவித் தொகையை அவர்களுடைய ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி சம்பந்தமான அத்தியாவசிய படிப்புச் செலவிற்காக கொடுக்கும் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றினை அறிமுகம் செய்து வைத்தல்

e) **தொழிற் பயிற்சி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்கள்:** தொழில் செய்யும்போதே பயின்று கொள்ளக்கூடிய தொழில்நுட்ப பயிற்சி மற்றும் தனிநபர் அபிவிருத்தி பயிற்சிநெறிகள் அறிமுகப்படுத்தல்.

f) **வேலைவாய்ப்பு ஒதுக்கீடு:** அரச நிறுவன தொழில் வாய்ப்புக்கள் ஏற்பட்டு அவை நிரப்பப்படும் போது காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களின் குடும்ப உறுப்பினர்களில் போதுமான திறமை கொண்டோருக்கு ஒரு வீதம் (1%) ஒதுக்குவதை அறிமுகப்படுத்த வேண்டும்.

g) **பொது** நிர்வாக முகாமை மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சு, தொழில் அமைச்சு மற்றும் தொழிற்சங்கங்கள், கல்வி அமைச்சு, வீடமைப்பு நிர்மாண அமைச்சு ஆகியோருடன் மேற்படி பரிந்துரைகள் சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கைகளை தொடங்கியது. மேலும் OMP நிதி மற்றும் பொது ஊடக அமைச்சிடம் தொடர்பு கொண்டு பரிந்துரைக்கப்பட்ட இடைக்கால நிவாரண வழிமுறைகளை 2019 வரவு செலவு திட்டத்தில் உள்வாங்க உறுதி செய்தது.

## 3. விசாரணைகளும் ஆய்வுகளும்

3.1. காணாமல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடிக் கண்டுபிடித்தலுக்கும் அவர்கள் அப்படி காணாமல் போனமை எவ்வாறு எச் சூழ்நிலையில் நடந்தது என்பதைக் கண்டுபிடித்துத் தெளிவுபடுத்தும் பொறிமுறையைத் தரும் அடிப்படை உள்மைய பணிப்பாணை OMP அலுவலகத்திற்கு உண்டு. [17] OMP முறைப்பாடுகளையிட்டு விசாரணை மற்றும் ஆய்வுகளின் முன்னெடுப்பினை முக்கிய வழக்குகளின் தகவல்களைப் பெற்றுக்கொள்வதிலிருந்து ஆரம்பித்துடன் மன்னார் பாரிய மனித புதைகுழி விசாரணைகளுக்கு உதவி, மற்றும் தனக்கு MNIR அமைச்சினால் தரப்பட்ட முறைப்பாடுகளை செயல்முறைப்படுத்தவும் ஆரம்பித்துள்ளது.

3.2. கடந்த எட்டு மாதங்களில் OMP பல்தரப்பட்ட சம்பந்தப்பட்ட பங்காளிகளைச் சந்திக்க நேர்ந்ததோடு பல காணாமல் போன காணாமல் ஆக்கப்பட்ட முக்கிய வழக்குகள் சம்பந்தட்ட நபர்களை சந்தித்து அவர்களிடமிருந்து தகவல்களை பெறவும், மீளாய்வு செய்யவும் அத்தகவல்ளை பகுப்பாய்வும் மீளாய்வும் செய்தது.

3.3. OMP இடைக்கால அறிக்கையில் அரச செயற்பாட்டாளர்கள் முறைமையில் கடத்தல் மற்றும் அது சம்பந்தமான குற்றச் செயல்களின் விசாரணைகளையிட்டும், வழக்குத் தொடர்தலையிட்டும் தமது இயலாத் தன்மையையும் விருப்பமின்மையையும் வெளியரங்கமாத் தெரிவித்துள்ளதை குறிப்பிட்டுள்ளது. கடத்தல் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட குற்றச் செயல்களை விசாரிக்கும் மற்றும் வழக்குத் தொடுக்கும் வழிமுறைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என தன் அறிக்கையில் OMP பரிந்துரைத்துள்ளது. மேலும் சில வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் குற்றச் செயலை செய்துள்ளதாகச் குற்றம் சாட்டப்பட்ட அல்லது சந்தேகப்படும் நபர்கள், விசேடமாக ஆயுதப் படையினர், பொலிஸார் மத்தியில் அவர்கள் தொடர்ந்தும் அதிகார அந்தஸ்தில் இருந்து விசாரணைகளில் குறுக்கிடும் நிலையில் அனுமதியளிக்கப் பட்டிருப்பதையிட்டு OMP தன் அறிக்கையில் கவலை தெரிவித்துள்ளது.

3.4. மேலும் OMP அலுவலகம் தற்போது தொடரும் விசாரணைகளுக்கு ஒத்துழைத்த ஆயுதப் படை அலுவலர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொல்லைகளுக்குள்ளானமை பற்றி பாரிய கரிசனையைத் தெரிவித்துக்கொள்கின்றது.

3.5. தனது இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளைத் தொடர்ந்து OMP மேலதிக செயற்பாட்டினை ஆரம்பித்து சட்டமா அதிபர் பொலிஸ்மா அதிபர், ஆகியோரிடம் கடத்தல் சம்பந்தமான விசாரணைகளையும் வழக்குத் தொடுத்தலையும் விரைவுபடுத்த ஒத்துழைப்பினைக் கோரியது. கடத்தல் மற்றும் அதனையொத்த குற்றச் செயல்கள் சம்பந்தமான விசாரணைகளில் அவர்களது முழுமையான ஒத்துழைப்பினைத் தருமாறு பாதுகாப்புச் செயலாளர், இலங்கை இராணுவ, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் தளபதிகள் ஆகியோரிடமும் பரிந்துரைத்தது. மேலும், தனிப்பட்ட வழக்குகளில் OMP

[17] OMP சட்டம், பிரிவு 2(a), 10(1)(a).

இடைப்பட்டு அரச அதிகாரிகளுக்கு சாட்சியளிப்போர் அச்சுறுத்தப்படவோ, கட்டாயப்படுத்தப்படுத்தப்படவோ, அழுத்தத்திற்குள்ளாக்கப்படுத்தவோ கூடாது என்றும் அவ்வகையான வழக்குகளில் விசாரணைகளும் வழக்குத் தொடுத்தலும் தடையின்றி நடைபெற வேண்டும் என்றும் எடுத்துரைத்தது.

## மன்னார் பாரிய மனிதப் புதைகுழி

3.6. தனது விசாரணை அதிகாரத்தின் கீழ், OMP அகழ்வு அல்லது உடல்கள் தோண்டி எடுக்கும் வேளையில் அவதானிப்பாளராக செயற்பட மாஜிஸ்ரேட் நீதிமன்றத்திடம் விண்ணப்பிக்க அதிகாரம் உண்டு. [18] மேலும் மனித எச்சங்களைக் கையாளும்போது காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களதும் அவர்களது உறவினர்களதும் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க அரச அலுவலர்களுக்குப் பரிந்துரை செய்யும் குறிப்பிட்டதோர் அதிகாரம் உண்டு. [19]

3.7. சட்ட வைத்திய ஆலோசனை அதிகாரி மன்னார் நகரில் ச.தொ.ச. கட்டிடத்தில் உள்ள பாரிய மனித புதைகுழியை அகழ்வு செய்யும் பணியை 2018 மாசி மாதம் 25ம் திகதி வழிநடத்த ஆரம்பித்தார். OMP மன்னார் நீதவான் நீதிமன்றில் விண்ணப்பித்துக்கொண்டதன் விளைவாக சந்தேகப்பட்ட புதைகுழிகளை அகழ்வு செய்யும்போது அவர்கள் அவதானிகளாயிருக்க 2018 ஆனி மாதம் 4ம் திகதி அம் மன்றம் அனுமதி அளித்தது. அது முதல் OMP அப் புதைகுழிகளை அவதானித்து வருகிறது.

3.8. 2018 ஆடி முதல் OMP அகழ்வாய்வு குழுவினரின் உணவு மற்றும் தங்குமிட செலவுகளைத் தாங்கிக் கொண்டதோடு மழையின்போது புதைகுழியிருக்கும் பகுதியை மறைத்து மூடுவதற்கென மேலதிக நிதியை கொடுத்துள்ளது. புதைகுழி இருக்கும் இடமானது தகுந்த முறையில் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக மேலதிகமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு OMP கூட்டிணைந்து மக்கள் நம்பிக்கையும் நம்பிக்கை பொறுப்பாண்மையும் பெறும் முறையில் செயற்படுகின்றது.

3.9. 2018 மார்கழி வரை சட்ட வைத்திய அலுவலர்கள் ஆண், பெண், சிறுவர்கள் உட்பட இருநூற்று எழுபத்து எட்டு மனித எலும்புக்கூடுகளை அகழ்வு செய்துள்ளார்கள். சட்ட வைத்திய அதிகாரிகள் மரணத்திற்கான காரணம், அது நிகழ்ந்த சூழ்நிலை மற்றும் அவ்வெலும்புக் கூடுகளின் அடையாளம் ஆகிவற்றைக் கண்டுபிடிக்க முயன்று வருகிறார்கள். இவ்வெலும்புக்கூடுகள் எக்காலத்துக்கு அல்லது எக்காலங்களுக்கு உரியவை என்பதைக் கண்டு பிடிப்பதற்கு எலும்பு மற்றும் பல் மாதிரிகளை எடுத்து கார்பன் 14 பரிசோதனைக்காக அனுப்ப முடிவு செய்யப்பட்டது. கார்பன் 14 பரிசோதனைகள் அப் பல்லை மற்றும் எலும்புகளைப் பரிசோதித்துப் பார்த்து, அப் பல் ஏறக்குறை எந்நேரத்தில் சீவித்திருந்தது எனக் கணித்துச் சொல்ல முடியும்.

[18] OMP சட்டம், பிரிவு 12(d).
[19] OMP சட்டம், பிரிவு 13(1)(k)(iii), 2(c).

3.10 மதிப்பிற்குரிய மன்னார் மாஜிஸ்ரேட் நீதவான் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரிகளுக்கு அளிக்கும் உதவியின் ஒரு பகுதியாக OMP எலும்பு மற்றும் பற்கள் ஆகியவற்றின் மாதிரிகளை சேகரிக்கவும் பதிவு செய்யவும் அவற்றைப் பொறுப்பேற்றுத் தொடர் பாதுகாப்பு அளிப்பதற்கும் ஏற்ற வழிமுறைகளை பரிந்துரை செய்தது. எலும்பு மற்றும் பற்கள், மன்னார் மாஜிஸ்ரேட் நீதவான் மதிப்பிற்குரிய டி. சரவணராசா, OMP ஆணையாளர்கள் திரு. மிராக் றஹீம், திரு. கே. வேந்தன் ஆகியோரதும் காணாமற்போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களைப் பிரதிநிதிப்படுத்தும் வழக்கறிஞர்கள், மன்னார் பிரசைகள் குழு உறுப்பினர் ஆகியோரது அவதானிப்பில் மாதிரிகள் சேகரிப்பின் முன்னெடுப்பு புதைகுழி இருந்த இடத்தில் மார்கழி மாதம் 18ம் திகதி முதல் 20ம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டு தெரிவு செய்யப்பட்டது.

3.11. தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள் வெளிநாட்டிலுள்ள ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்டு முதற்கட்ட அகழ்வாய்வு அறிக்கையுடன விசாரணை குழுவினால் மன்னார் நீதவானிடம் ஒப்படைக்கப்படும்.

## பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சி பாதுகாப்பு

3.12. பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சி ஆகியவர்களைப் பாதுகாக்க வழிமுறை ஒன்றினை விருத்தி செய்து அதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் OMP க்கு உண்டு. [20] பலியாக்கப் பட்டவரிடமிருந்தும் சாட்சிகளிடமிருந்தும் முறைப்பாடுகளைக் கேட்டுப் பதிவு செய்யும் வழிமுறைகளை அது அபிவிருத்தி செய்து தன் இடைக்கால அறிக்கையில் பரிந்துரை அடிப்படையில் பின்தொடர்ந்தது. OMP யானது பாதிக்கப்பட்டவர்களும் மற்ற நீதிக்காக உடன் உழைப்பவர்களும் அச்சுறுத்தப்படும்போது சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு செயலாளர் ஆகியோர் இதனை தடுத்து, விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்க வேண்டிக்கொண்டது.

3.13.காணாமற்போன அல்லது காணாமற் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் காணாமற்போனவர்கள் சம்பந்தமாக பணியாற்றியமைக்காக தொந்தரவு செய்யப்பட்ட அல்லது அச்சுறுத்தப்பட்ட அல்லது மிரட்டப்பட்டபோது OMP சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தலையீடு செய்தது.

3.14. மேலும், தனிப்பட்ட வழக்குகளுக்கும் மேலதிகமாக, OMP யானது பாதுகாப்பு அதிகாரிகளிடம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய வழக்குகளில் சாட்சிகளை அச்சுறுத்தப்படக்கூடிய விடயத்தில் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்துள்ளது.

[20] OMP சட்டம், பிரிவு 13(1)(g), 18.
[27] OMP சட்டம், பிரிவு 12(a).

## முறைப்பாடுகள்

3.15. காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவரின் உறவினரிடமிருந்தோ, அல்லது வேறொருவரிடமிருந்தோ அல்லது நிறுவனத்திடமிருந்தோ காணாமல் ஆக்கப்பட்டவர் சம்பந்தமான முறைப்பாடுகள் அவர் எப்போது காணாமல் போனாரோ அல்லது காணாமல் ஆக்கப்பட்டாரோ என்ற பாகுபாடு இல்லாது பெற்றுக்கொள்ள OMP அதிகாரம் கொண்டுள்ளது.[27.] OMP தன்னிடம் வரும் புதிய முறைப்பாடுகளை செய்முறைப்படுத்த ஆரம்பித்துள்ள அதே வேளையில் MNIR தனக்குக் கையளித்து, தம் கைவசமுள்ள முறைப்பாடுகளை செய்முறைப்படுத்துவதையும் பதில்கள் அளிப்பதையும் மேற்கொள்ளும்.

3.16. 2017ம் ஆண்டு MNIR பின்னூட்ட தரவு பத்திரங்களைக் கணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குடும்பங்களுக்கு விநியோகித்தது. இத்தரவுத் தாள்கள் காணாமல் ஆக்கப்பட்டவரது குடும்பத்தினர் இந்த ஆளைப் பற்றியும் எந்தச் சூழலில் அக் காணாமல் போனமை நிகழ்ந்தது என்றும், எத்தகைய பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் எவ்வகையான உதவி அல்லது பரிகாரம் தேவைப்படுகின்றது எனவும் கேட்டிருந்தது. நிரப்பப்பட்ட பின்னூட்ட தரவு தாள்களுக்கு அவ்வவ் மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டது. மொத்தம் எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கிய 14,641 கோப்புக்கள் 2018 பங்குனி மாதம் 15ம் திகதி OMP அலுவலகத்தில் கையளிக்கப்பட்டன. MNIR அமைச்சினால் கையளிக்கப்பட்ட் முறைப்பாடுகளுக்கு பதிலிறுக்கும் செயற்பாட்டினை OMP ஆரம்பித்துள்ளது.

3.17. மேலதிகமாக OMP. நூற்று இருபது முறைப்பாடுகளைக் கடிதம் மூலமாகவும், தொலைபேசி அழைப்பின் வாயிலாகவும், நேரில் OMP தலைமை அலுவலகத்தில் சந்திப்பின்போதும், பொதுக் கூட்டங்களிலும், காணாமற்போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருடைய குடும்பங்களை நேரடியாக சந்தித்தபோதும் பெற்றுக்கொண்டது. இன்னமும் மேலாக, சிவில் சமூக அமைப்புக்களின் வாயிலாகவும் OMP முறைப்பாடுகளை சமர்ப்பிக்கும் குடும்பங்களுக்கு உதவும் வழக்கறிஞர்கள் மூலமாகவும் முறைப்பாடுகள் பல பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. OMP அம்முறைப்பாட்டாளர்களுக்குப் பதிலளித்து போதுமான சட்ட ஆலோசனைகளை வழங்கி அவசியமானால் அவர்கள் நிர்வாக உதவிகள் பெறறுக்கொள்ளும் வழிமுறைகளுக்கான வாய்ப்பு பற்றிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

## காணாமற்போன ஆட்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர்கள் பற்றி தற்போது இருக்கும் தரவுகளை கூட்டிணைப்பது

3.18. காணாமற்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் சம்பந்தமான தற்போது பெறப்படும் தரவுகளையும் முன்னர் வேறு நிறுவனங்கள், அமைப்புக்ள், அரச திணைக்களங்கள், விசாரணை ஆணைக்குழுக்கள், விசேட சனாதிபதி ஆணைக்குழுக்கள் மூலம்

பெறப்பட்டவையையும் கூட்டிணைக்கவும் கிடைக்கும் அனைத்து தரவுகளையும் சட்டத்தின் கீழ் உள்ள தரவுதளத்தில் மையமாக்கவும் முடியும்[21]

3.19. விருப்பமற்ற முறையில் கடத்திச் செல்லுதல் மற்றும் காணாமல் ஆக்குதல் பற்றிய முந்தைய விசாரணை ஆணைக்குழுக்களின் பதிவுகள் தேசிய சுவடிக்கூட திணைக்களத்தில், முப்பது ஆண்டுகளுக்கு திறக்கப்படாவண்ணமாய் சனாதிபதியின் முத்திரையிடப்பட்டுள்ளது. இப் பதிவுகளில் தனிப்பட்ட வழக்கின் ஆவணங்கள், வாக்குமூலம், கையெழுத்துப் பிரதிகள், உத்தியோகபூர்வ நிறுவன கடிதப் போக்குவரத்துக்கள் ஆகியவை அடங்கும். தேசிய சுவடிகள் திணைக்களமே இவ்வாவணங்களின் மூலப்பிரதிகளின் சட்டபூர்வமான உறைவிடமாகும்.

3.20. அதி உத்தமராம் சனாதிபதியிடமும் தேசிய சுவடிகள் காப்பக திணைக்கள பொது அத்தியட்சரிடம் இவ்வாவணங்களை பார்வையிடவும் அவற்றை இலத்திரனியல் டிஜிட்டல் முறையில் நெடுங்காலத்துக்குப் பாதுகாக்கவும் OMP முறையான வேண்டுகோள் ஒன்றினை விடுத்தது.

3.21. 2018 ஆடி மாதம் OMP தேசிய சுவடிகள் காப்பகத்தில் முத்திரையிடப்பட்ட ஆவணங்களை அணுகும் முதற்கட்ட அனுமதியினைச் சனாதிபதி செயலகம் அளித்தது. எனினும், சம்பந்தப்பட்ட ஆவணங்களை மீள்பரிசோதித்து டிஜிட்டல் மயப்படுத்த கா.போ.அ. இன்னமும் முறையான அங்கீகாரத்தை பெறவில்லை.

## தரவுதளம்

3.22. காணாமல் ஆக்கப்பட்டவர் பற்றிய எல்லா விபரங்களும் அடங்கிய தரவுதளம் ஒன்றினை உருவாக்கி, முகாமை செய்து, நடத்தவும் அதன் பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ள தொழில்நுட்ப பாதுகாப்பு உட்பட எல்லா நடவடிக்கையைம் மேற்கொள்ள OMP கடமைப்பட்டுள்ளது.

3.23 OMP ஒரு தற்காலிக தரவுதளத்தை உருவாக்கி முறைப்பாட்டாளர்களிடமிருந்தும் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கபட்டவர்கள் குடும்பத்தினரிடமிருந்து பெறப்படும் வித்தியாசமான தரவுகளை ஒன்றாக்கப்படும் செய்முறையை ஆரம்பித்துள்ளது. இதில் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், மற்றும் முறையீட்டார்களின் தனிப்பட்ட தரவுகளுடன், காணாமற் போனமை பற்றிய விபரங்களுடன் குற்றமிழைத்தவர்களாக கூறப்படுகின்றவர்களின் தனிப்பட்ட தரவுகளும் அடங்கும். இத் தற்காலிக தரவுதளம் காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்கள், நிகழ்வுகள், புதைகுழிகள் இருக்கும் இடங்கள், மற்றும் OMP யின் நீண்டகாலகுறிக்கோளான விசாரணை மற்றும் தேடிக் கண்டுபிடிக்கும் பணிக்கு உதவும்.

[21] OMP சட்டம், பிரிவு 10(1)(e).

3.24. 2018 ஐப்பசி மாதம், சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் திறமையுடைய ஆறு தரவேற்றுகிறவர்களை OMP பணிக்கு அமர்த்தி அவர்களுக்கு தொடர்ச்சியான மும்மாதங்களில் மூன்று பயிற்சி அமர்வுகள் தந்துள்ளது. 2018 கார்த்திகை முதல் தரவேற்றுகிறவர்கள் MNIR. OMP அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டமையை தரவேற்றியுள்ளனர். 2018 மார்கழி 31 வரை 440 கோப்புக்கள் OMP அலுவலகத்தால் கையாளப்பட்டுள்ளன.

## 4. நிறுவன அபிவிருத்தி

4.1. கடந்த ஆண்டு OMP உடனடியாக எதிர்கொள்ள வேண்டிய கணிசமான சவாலானது அதன் அலுவலகத்தைச் செயற்பாட்டிற்குக் கொண்டு வர ஒரு கட்டிடத்தைப் பெறுவதும், நிரந்தர ஊழியர்களைப் பணிக்குச் அமர்த்துவதும், அமைப்பு கட்டமைப்பை உருவாக்குவதும் உள்ளக விதி மற்றும் வழிமுறைகளை அபிவிருத்தி செய்வதுமாய் இருந்தது. இவ்வாறான உள்ளக விதி மற்றும் வழிமுறைகளும் செயற்பாடுகளும் உருவாக்கும் வேளையில் OMP அலுவலகத்தின் பணிப்பாணைக்கு அவை ஏற்புடையதா என்று உறுதி செய்துகொண்டு சமூக உளவியல் பதிலிறுப்பு கொள்கையை காத்துக்கொள்வதாகவும் இருந்தது.

### அலுவலகங்களை அமைத்தலும் ஊழியர் பணிக்கமர்த்தப்படுவதும்

4.2. திரு. எம்.ஐ.எம். றபீக் அவர்கள் 2018 பங்குனி மாதம் 15ம் திகதி OMP செயலாளராக நியமிக்கப்பட்டார். செயலாளர் உட்பட எல்லா ஏழு ஆணையாளர்களும் கலந்து கொண்ட முதலாவது உயர்மட்ட அதிகாரிகளின் கூட்டம் SCRM எனுமிடத்தில் 3028 பங்குனி 13ம் திகதி நடைபெற்றது. 2018 மார்கழி 31ம் திகதிவரையில் உயர்மட்ட அதிகாரிகள் பத்து கூட்டங்களையும் ஆணையாளர்கள் மத்தியில் முப்பத்து ஏழு கூட்டங்களையும் நிகழ்த்தியுள்ளது.

4.3. OMP சட்டத்தின்படி OMP அலுவலகம் செயற்பட்டிட அது சம்பந்தப்பட்ட அமைச்சர் அது செயற்படவேண்டிய திகதியை வர்த்தமானியில் கட்டளையாகப் பிரசுரிக்க வேண்டும் என்பது அவசியம்.[22] எனவே OMP அலுவலகமானது ஒரு குறிப்பிட்ட அமைச்சின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். கடந்த எட்டு மாதங்களாக அமைச்சுக்களும் அவைகளுக்குக் கீழுள்ள விடயங்களும் அடிக்கடி மாற்றமைடைந்துகொண்டே இருந்ததால் OMP பல காலப்பகுதிகளில் பொறுப்புள்ள அமைச்சொன்றிடமிருந்து தனக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள இயலாது போயிற்று. முதலில் OMP தேசிய ஒருங்கிணைப்பு, நல்லிணக்க அமைச்சின்கீழ் வருவதாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. [23] 2018 வைகாசி மாதம் அது தேசிய ஒருமைப்பாடு மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சின்கீழ் வருவதாக வர்த்தமானி

[22] OMP சட்டம், பிரிவு 1(2)

[23] வர்த்தமானி 2036/21, 2017 புரட்டாதி 12

அறிவித்தல் வந்தது. [24] 2018 மார்கழி மாதத்தில் இது மீண்டுமொருமுறை வர்த்தமானி அறிவிப்பால் தேசிய நல்லிணக்க ஒருங்கிணைப்பு அரச கரும மொழிகள் அமைச்சில் சேர்க்கப்பட்டுள்ளது,[25]

4.4. OMP தனது தற்காலிக அலுவலகத்தை 2018 பங்குனி மாதம் இல. 34, நாரஹேன்பிற்ற வீதி, நாவல என்ற முகவரியில் தாபித்தது.

4.5. இவ்வலுவலகம், 2018 கார்த்திகை மாதம் 15ம் திகதியன்று, “சிராவஸ்தி” இல. 32, சேர் மார்க்கஸ் பர்னாண்டோ மாவத்தை என்னும் புதிய முகவரிக்கு இடம் பெயர்ந்தது. இவ்விடம், பாராளுமன்றத்தின மேற்பார்வையில் வருவதால் காணாமற்போனோர் அலுவலத்திற்கு மதிப்பிற்குரிய சபாநாயகர் திரு. கரு ஜயசூரிய இடம் ஒதுக்கித் தந்துள்ளார்.

4.6. OMP முதலாம் ஆண்டு முழுவதுமே தொடர்ச்சியாக அதன் கணிசமான வளங்களை பணிக்கு ஏற்ற திறனும் அனுபவமும் கொண்ட போதுமான ஊழியர்களை பணிக்கமர்த்துவதற்கு அர்ப்பணித்தது. சிரேஷ்ட மற்றும் பொருத்தமான நிலைகளில் அலுவலர்களை போட்டியான சம்பள விகிதத்தில் அமர்த்த அரச அதிகாரிகளிடமிருந்து அங்கீகாரம் பெறுவது சவாலாகவே இருந்தது.

4.7. 2018 பங்குனி மாதம் முதல் ஆனி மாதம் வரை OMP இரண்டு அதிகாரிகளையும், ஒரு பயிலுனரையும், ஒரு காரியாலய உதவியாளரையும் மட்டுமே கொண்டு இயங்கியது. 2018 பங்குனி 29ம் திகதி முகாமை சேவை திணைக்களம் OMP அலுவலகத்திற்கு இருபத்து எட்டு பதவிகள் இருக்கலாம் என அங்கீகரித்தது. 2018 சித்திரையில் இதில் இருபத்து ஏழு பதவிகளுக்கான விளம்பரங்கள் செய்யப்பட்டு உதவி நிர்வாக அத்தியட்கர், ஊடக அலுவலர், ஆய்வு மற்றும் ஆதார அலுவலர், ஆறு முகாமை உதவியாளர்கள், ஆறு தரவேற்ற செயற்பாட்டாளர்கள், ஒரு மொழி/ உரைபெயர்ப்பாளர், மூன்று காரியாலய உதவியாளர்கள் மொத்த விண்ணப்பதாரர்களில் மிகுந்த தகுதியானவர்களை தெரிவு செய்து அவர்களை நேர்முக சந்திப்பிற்கு அழைத்து தேர்வு செய்வதினை தவிசாளர் திரு. சாலிய பீரிஸ் அவர்கள் நியமித்த ஆணையாளர்களினால் மேற்பார்வை செய்யப்பட்டது.

4.8. 2018ம் ஆண்டு பங்குனி முதல் ஆனி மாதம் வரை பணியாளர்கள் இல்லாத காரணத்தல் OMP. செலவினங்கள் அனைத்தும் MNIR அமைச்சு கணக்காளரினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. [26] நிதி மற்றும் கொள்வனவு அத்தியட்சர் ஒருவர் OMP அலுவலகத்திற்கு 2018 ஆனி 5ம் திகதி நியமிக்கப்பட்ட பின்னர் எல்லா செலவினங்களும் உள்ளகமாகவே முன்னெடுக்கப்படுகின்றது. மேலும், 2018 ஆனி மாதம் முதலாக OMP அதன் உள்ளக செயற்பாடுகளைக் மேற்பார்வை செய்ய ஒரு நிர்வாக அத்தியட்சர் நியமிக்கப்பட்டார்.

[24] வர்த்தமானி 2073/19, 2018. வைகாசி 31
[25] வர்த்தமானி 2103/33, 2018 மார்கழி 28
[26] வர்த்தமானி 2073/19, 2018. வைகாசி 31

4.9. மற்றும் 2018 ஆவணி முதல் ஐப்பசி வரை பொது ஊடக அமைச்சுடனும் தேசிய வரவுசெலவுதிட்ட திணைக்களத்துடனும் மேற்கொண்ட பல சுற்றுக் கடிதப் போக்குவரத்தின்பின், வரவுசெலவுத்திட்ட அத்தியட்சர் OMP அலுவலகத்திற்கு நான்கு வாகனங்களை அங்கீகரித்தார். தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய அலுவல்கள் அமைச்சு OMP அலுவலகத்திற்கான வாகனங்களை லீசிங் முறையில் பெற்றிட வழிமுறையை ஆரம்பித்தது. 2018 புரட்டாதி மாதம் OMP வாகன ஓட்டிகளுக்கான வெற்றிடங்களை விளம்பரம் செய்து, அவர்களை நேர்முகம் கண்டு, தெரிவு செய்தது. எனினும் OMP எந்த வாகனமும் கைவசம் கொண்டிராததால் இறுதி நியமனம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

4.10. நீண்டகால அடிப்படையில் கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்திற்கும் மேலதிகமாக OMP நான்கு பிராந்திய அலுவலகங்களும் எட்டு உப-பிராந்திய அலுவலகங்களும் நிறுவப்பட முன்மொழிகின்றது. இவை அனைத்தையும் செயற்பாட்டுக்குட்படுத்த OMP அலுவலகத்திற்கு இருநூற்று ஐம்பத்து நான்கு நிரந்தரப் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். OMP தனது இடைக்கால அறிக்கையில் 2018ம் ஆண்டு நிறைவுபெற முன் மாத்தறை, மன்னார் ஆகிய இடங்களில் அலுவலகங்களைத் தாபிக்க முன்மொழிந்தது. தனது பிராந்திய அலுவலகங்களுக்குப் பொருத்தமான அலுவலக இடவசதிகளுக்காக விளம்பரங்கள் தரப்பட்டு அவற்றின் ஏற்ற தன்மையை மதிப்பீடு செய்ய அவ்விடங்களுக்கு விஜயங்கள் மேற் கொள்ளப்பட்டன. மேலும் 2018 ஆவணி மாதம் இருபத்து ஐந்து ஊழியர் நியமனங்களை அங்கீகரிக்க DMS இடம் அனுமதி கோரியது. இவ்விருபத்தைந்து நியமனங்கள் மாத்தறை, மன்னார் ஆகிய இரண்டு பிராந்தியங்களுக்கான பதினெட்டு பதவிகள் உட்பட்டவையாகும்

4.11. DMS இருபத்து ஐந்து பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு திட்டமுறைக்கு உட்பட்டு நிபந்தனையுடன் அங்கீகாரம் அளித்தது. இது பதவித் தலைப்பு, சம்பளம், சேவைப் பிரிவு முதலியவற்றை விளக்குபவையானவை. OMP தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிநிலைகளையிட்டு தனது கரிசனையை 2018 ஆவணி 27ம் திகதி DMS க்குத் தெரிவித்தது.

4.12. 2018 புரட்டாதி 26ம் திகதியன்று காலியிடமாக இருக்கும் இருநூற்று இருபத்தொன்பது பதவிகளை நிரப்ப வேண்டுதலை DMS க்கு அனுப்பப்பட்டது. மீதியான இருபத்து ஐந்து பதவியிடங்கள் மீளவும் 2018 மார்கழியில் அனுப்பப்பட்டன. புரட்டாதிக்கும் மார்கழிக்கும் இடையே DMS க்கும் OMP அலுவலகத்திற்கும் இடையே நடைபெற்ற ஐந்து கூட்டங்கள் ஊழியர் சேகரிப்பு விண்ணப்பம் பற்றியதாக அமைந்தது.

4.13. 2018 மார்கழி 31ம்திகதி நிலவரத்தின்படி இருநூற்று ஐம்பத்து நான்கு பதவிகள் கோரப்பட்டிருந்தாலும் OMP ஐம்பத்தாறு பதவிகளுக்கே அங்கீகாரம் பெற்றுள்ளது. DMS உடன் OMP தொடர்ந்தும் இது சம்பந்தமாக செயற்பட்டு மேலதிகமாக இருக்கும் ஊழியர் பதவிகளைப் பெற்றுக்கொள்ள முயலும்.

## நடைமுறைகளையும் விதிகளையும் அபிவிருத்தி செய்தல்

4.14. தனது செயற்றிறன்மிக்க பணியாற்றலுக்காக விதிகளையும் நடைமுறைகளையும் உருவாக்க OMP அலுவலகத்திற்கு வெளிப்படையான அதிகாரம் உண்டு. [27] OMP தன் பணியையும் அதிகாரத்தையும் நிறைவேற்றும் விதிமுறைகளை அபிவிருத்தி செய்யும் முன்னெடுப்பை ஆரம்பித்தது. இதில் உயர்மட்ட அதிகார சபை விதிமுறைகள், ஆணையாளர்கள் நடந்து கொள்ளும் முறைமைபற்றிய குறியீடுகள், தகவல்கள் இரகசியத்தனமையை காப்பாற்றும் வழிகாட்டல்கள், கணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய புதிய முறைப்பாடுகள் பற்றிய வழிமுறைகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோரிடமிருந்து வரும் முறைப்பாடுகள் பதிவு பற்றிய முறைமைகள், தடுத்துவைக்கப்பட்ட இடத்தினை தேடுதலுக்கான வழிகாட்டுதல்கள் இவற்றுள் அடங்கும்.

## உளசமூக ஆதரவு

4.15.அவசியப்படுமிடத்தில் நிர்வாக அல்லது நலன்புரிச் சேவைகளும் காணாமற்போன மற்றும் காணமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு உளசமூக ஆதார உதவியும் தந்திட OMP வெளிப்படையான பணிப்பாணை கொண்டது. [37] OMP அலுவலகத்தின் உளசமூகவியல் ஆதார சேவையானது உளசமூகவியல் பதிலிறுப்பை OMP வழிமுறைகளுக்கும் பணியாற்றலுக்கும் ஒருமித்தாக்கிட விழைகின்றது. இதன்படி அமைப்பின் திறன்தன்மை காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர்களது குடும்பங்களுக்கு வசதியளிக்கின்றது. உளசமூகவியல் உதவியாதாரமானது OMP அலுவலகத்தின் அடிப்படை பணிப்பாணையாக இருந்து காணாமற்போன ஆட்களின் குடும்பங்களின் நிலையை மேம்படுத்தி அவர்கள்தம் உரிமைகளையும் மதிப்பையும் உயர்த்தி நிற்பதாகும்

4.16. காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டடோர் குடும்பங்கள் தம் குடும்ப உறுப்பினர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையைத் தேடும் சவாலுடன்கூட தீர்வு காணப் படாத இழப்பு பற்றிய உளவியல் தாக்கங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். அதே வேளையில் குடும்பத்தையொட்டிய தன்மை, சமூக விடயங்களும் பொறுப்புக்களும்; பொருளாதார பிரச்சினைகள்; சமூகத்தில் ஏற்பட்ட வடுவும் ஓரங்கட்டப்படுதலும்; பாலியல் தொல்லைகளும் சுரண்டல் போன்ற பல்தரப்பட்ட உளசமூகவியல் விடயங்களை அவர்கள் அனுபவிக்கின்றனர். தம் காணாமற்போன அல்லது காணாமல் ஆக்கபட்ட குடும்ப உறுப்பினருக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியும் தேவை மிக முன்னுரிமையாய் இருப்பது பொதுவாக அதிகமாய் இருக்கும் அதே வேளையில் இக்குடும்பங்கள் அன்றாட வாழ்க்கையில் தம் அடிப்படை தேவைகளுக்கான ஆதரவும் தேவைப்படுகின்றது.

[27] OMP சட்டம், பிரிவு 11(b), 26.
[37] OMP சட்டம், பிரிவு 13(1)(e).

4.17. OMP செயற்பாட்டினை தொடர உளசமூகவியல் பதிலிறுப்பை ஒன்றிணைக்கும் உபாயமாக ஒரு அபிவிருத்தி நடைமுறையை உளசமூகவியல் ஆதாரக் குழு தொடங்கியுள்ளது

இம் மும்முனை உபாயம் கீழ்க்காணுபவற்றில் கவனம் செலுத்தும்

a) காணாமல் போன ஆட்களின் குடும்பங்களின் உளசமூகவியல் கரிசனைகளை இனம் கண்டு அதற்குப் பதிலிறுப்பதோடு ஊழியர் நலன் பாதுகாக்க OMP யின் உள் திறனை வலுவூட்டிட வேண்டும்.

b) காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ மற்றும் சமூக உளவியல் பராமரிப்பு உதவி பற்றிய வசதிகளை முகவர் வழியா ஏற்படுத்தல்.

c) பரந்துபட்ட கொள்கை மற்றும் சமூக சூழலில் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட அன்பு செய்வோருடன் வாழ்வின நிச்சயமற்ற தன்மைகளுடன் சவால்களை இனம்கண்டு பின்னவர் காணாமல்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர் குடும்பங்களுக்கு சமூக ஆதரவுக்கான சாதகமான கொள்கையை உற்றுநோக்குவார்.

4.18. உளசமூகவியல் ஆதரவு குழுவானது ஊழியர் திறனை அபிவிருத்தி செய்ய, சமூக உளவியல் பதிலிறுப்பு தன்மை பற்றிய ஒரு செய்றதிட்டத்தினை வரைவுசெய்து இரண்டு பட்டறைகளை 2018 ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் நிகழ்த்தியது, முதலாவது பட்டறையானது ஊழியர்கள் உளசமூகவியல் ரீதியாக நன்மை பயப்பதாக இருப்பதற்கு காணாமல்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களில் உதவக்கூடும் என்றுள்ளது. இரண்டாவது பட்டறையானது OMP தரவேற்றும் பணியாளர்களுக்காக நடத்தப்பட்டது, இது இக்குழுவினர் அழுத்தங்களை எப்படி கையாளுவர் என்பதற்கு உதவியதோடு அமைதியின்மையை ஏற்படுத்தும் தகவல்களை கையாளும்போது அதைக் கையாளும் தனி நபரும் குழுவும் அந்த சவால்களை எப்படி கையாளலாம் என்பதுமாகவிருந்தது.

4.19. உளசமூகவியல் உணர்திறனை மேம்படுத்தும் இதர கூறுகளின் பணியினை ஆதரிப்பது OMP யின் சமூக உளவியல் ஆதரவு சேவையின் முக்கியமானதொரு பங்களிப்பாகும். அத்தகைய ஆதரவின்படியான தொடர்பாடல் பிரச்சாரத்தை உருவாக்கியதும், காணமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களோடு கலந்துரையாடுகை அவர்களது உளசமூகவியல் விடயங்களை பற்றி சட்ட கூறு உளசமூகவியல் காரணங்களை OMP பற்றி பொதுசன புரிந்துணைர்வினைச் செய்தலாகும்.

## திறன் அபிவிருத்தியும் அறிவு பகிர்தலும்

4.20. காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள், மனித எச்சங்கள், இடைக்கால நீதி, சுவடியாக்கல், தரவுதள முகாமைத்துவம் முதலியவற்றில் நிபுணத்துவமும் கொண்டவர்களோடு. தேசிய மற்றும் சர்வதேச பங்காளர்களுடனும் பலதரப்பட்டவர்களோடு OMP பல சந்திப்புகளை மேற்கொண்டது. தேசிய மற்றும் சர்வதேச பங்காளர்களுடனும் மற்றும் கருத்துசார் விடயங்கள் முலியவற்றில் தனது சொந்த பணியை மேற்கொண்டு ஆலோசனை பெற OMP முயற்சித்தது. பலதரப்பட்டவர்களோடு OMP பல சந்திப்புகளை மேற்கொண்டது.

4.21.தேசிய பங்காளர்கள் மத்தியில், OMP சனாதிபதி செயலகம், மதிப்பிற்குரிய பிரதம மந்திரியின் அலுவலகம், கௌரவ சபாநாயகரின் அலுவலகம், தேசிய ஒருமைப்பாட்டு சகவாழ்வு அரசாங்க அமைச்சு, சட்ட வைத்திய அலுவலர்கள், நிதி ஊடக அமைச்சு அரசாங்க தகவல் திணைக்களம், மாவட்ட செயலகங்கள் ஆகியோரோடு சந்திப்புகளை மேற்கொண்டுள்ளது.

4.22. OMP சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றோடு இணைந்து தொழில்நுட்ப ஒத்துழைப்பு கொண்டிருப்பதோடு அதுபோன்ற பணிபபாண்மைகளைக் கொண்ட சைப்பிரஸ், பொஸ்னியா, ஹெர்சகோவினா, கவுதமாலா ஆகிய நாடுகளின் OMPக்களோடு இணைந்து கொண்டுள்ளது. OMP, அமெரிக்க தூதுவராலயம், சுவிட்சர்லாந்துக்கான உயர் ஸ்தானிகராலயம், ஐக்கிய இராச்சியத்திற்கான உயர் ஸ்தானிகர், கனேடிய தூதுவராலயம், அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயம், ஐரோப்பிய யூனியன் தூதுக்குழுவினரிடமும் சந்திப்புக்களை ஏற்படுத்தி யுள்ளது.

4.23. OMP தனது எல்லா ஊழியர்களுக்கும் ஒரு உள்ளக பட்டறையை கொழும்பு ஜானகி ஹோட்டலில் 2018 ஐப்பசி 20ம் திகதி நடாத்தியது. இப்பட்டறையானது OMP ஊழியர்கள் OMP தின் பணிப்பாணை பற்றிய புரிந்துணைர்வை மேம்படுத்துவதற்கும் கா.போ.அ. ஊழியர்பனிடமிருந்து பின்னூட்டம் பெறுவதற்கும் நிகழ்த்தப்பட்டது.

4.24. மேலதிகமாக கா.போ.அ. தவிசாளர், ஆணையாளர்கள், அலுவலரக்கள் கீழ்க்காணும் நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்:

| திகதி | நிகழ்ச்சி |
|---|---|
| 2018 மாசி 17 - 19 | தவிசாளரும் ஏனைய ஆணையாளர்களும SCRM ஏற்பாடு செய்திருந்த ஒரு பட்டறையில் கலந்து கொண்டார்கள். |
| 2018 சித்திரை 21 | ஆணையாளர்கள் திரு. மிராக் றஹீம், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் மொஹாந்தி பீரிஸ் மற்றும் தவிசாளர் சாலிய பீரிஸ் ஆகியோர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூட்டிய "மரண விசாரணைகள்" சம்பந்தமான சட்ட வரைவு" கூட்டத்தில் OMP அலுவலகத்தைப் பிரதிநித்துவம் செய்தனர். அதற்கு நீதி மற்றும் சிறைச்சாலை சீர்திருத்த அமைச்சு மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் சட்ட மருத்துவ அலுவலர்கள் கலந்து கொண்டார்கள். |
| 2018 வைகாசி 5 | ஆணையாளர் திரு. மிராக் றஹீம் OMP பற்றிய உரையை கடந்து செல்லும் நீதி பயிற்சி நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஊழியர்களுக்கு ஆற்றினார். |
| 2018 ஆனி 26 முதல் ஆடி 4 வரை | சுவிஸ் கூட்டாட்சியின் வெளிநாட்டு விவகார திணைக்களமும் "சுவிஸ் சமாதானமும்" இணைந்து ஏற்பாடு செய்த "கடந்த காலத்துடன் செயற்படுவது"கற்கைநெறியில் ஆணையாளர்கள் (ஓய்வு) மேஜர் ஜெனரல் மொஹாந்தி பீரிஸ் மற்றும் திருமதி. புண்ணியமூர்த்தி ஜெயதீபா ஆகியோர் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் உடன் சுவிட்சர்லாந்தின் முன்சன்விலரில் மேற்கொண்டனர். OMP தாபிப்பு, அதன் அமைப்பு விதிகள், அதன் கம்பசிசின், பணிப்பணை மற்றும் அதிகாரங்கள் பற்றி ஒரு சுரக்கமான விவரணத்தை ஆணையாளர் பீரிஸ் வழங்கினார் |
| 2018 ஆனி 29 | ஆணையாளர் திரு. மிராக் றஹீம் OMP பங்கு பற்றி இலங்கை வெளிநாட்டு சேவையின் காடெட் குழுவொன்றிற்கு அவர்களின் உள்ளாக்க பயிற்சி நெறியின் பகுதியாக பண்டாரநாயக்கா சர்வதேச இராசதந்திர பயிற்சி நிலையத்தில் உரையாற்றினார் |
| 2018 ஆடி 2-10 | ஆணையாளர்கள் திரு. கே. வேந்தன், திரு. மிராக் றஹீம், திரு. எஸ். கே. லியனகே (சட்டத்தரணி), கலாநிதி நிமல்கா பெர்னாண்டோ ஆகியோர் சைப்பிரஸ் நாட்டில் காணாமற் போன ஆட்கள் பற்றிய செயற்குழுவின் கல்விச் சுற்றுலாவிற்காக சைப்பிரஸ் சென்றனர். |
| 2018 ஆடி 21-22 | பாணந்துறையில் ஏற்பாடு செய்திருந்த ஒரு பட்டறையில் தவிசாளர் திரு. சாலிய பீரிஸ் அவர்கள் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சிரேஸ்ட அதிகாரிகளுக்கும் ஊடகவியலாளருக்கும் மத்தியில் உரையாற்றினார். |
| 2018 ஆடி 24 | ஆணையாளர் திரு. மிராக் றஹீம் OMP பற்றியும் அதிர் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றியும் ஆப்கான் சிவில் சமூக அமைப்பினருக்கு உரையாற்றினார். |
| 2018 ஆவணி 15 | ஆணையாளர் கலாநிதி நிமல்கா பெர்னாண்டோ OMP பற்றிய ஒரு உரையை இழப்பீடு பற்றிய அலுவலகத்தில் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் நிகழ்த்தினார். |
| 2018 ஆவணி 23 | கொழும்பில் சுலாங்கோர்ன் பல்கலைக் கழகத்தின் ரோட்டரி சமாதான நிலையம் ஏற்பாடு செய்திருந்த ஒரு நிகழ்வில ஆணையாளர் கலாநிதி நிமல்கா பர்னாண்டோ OMP அலுவலகத்தைப் பிரதிநித்துவம் செய்தார். |
| 2018 புரட்டாதி 13 | OMP பற்றி ஆணையாளர் திருமதி புண்ணியமூர்த்தி ஜெயதீபா அவர்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் மத்தியில் ஒரு நிகழ்ச்சியில் OMP பணிப்பாணையைப் பற்றி உரையாற்றினார் |

| | |
|---|---|
| 2018 புரட்டாதி 23 | ஆணையாளர்கள் திருமதி புண்ணியமூர்த்தியும் திரு. ஏஸ். கே. லியனகே (சட்டத்தரணி) ஆகியோர் குருநாகலையில் காணாமற்போன ஆட்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர் பற்றிய அலுவலகத்தின் பணிப்பாணை பற்றிய புரிந்துணர்வை மேம்படுத்தும் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டனர். |
| 2018 புரட்டாதி 26 | OMP. பிரதிநிதியாக, ஆணையாளர் திரு. மிராக் ரஹீம் அவர்கள் மனித எச்சங்களை அடையாளம் காணுதல் சம்பந்தமான சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஒழுங்கு செய்திருந்த பட்டறை ஒன்றில் கலந்து கொண்டார். |
| 2018 ஐப்பசி 2 | ஆணையாளர் கலாநிதி நிமல்கா பெர்னாண்டோ இலங்கையில் பால்நிலை சுரண்டல்கள், மற்றும் பால்நிலை இலஞ்ச விடயங்களில் முற்றிலும் சகிப்பின்மை பற்றிய பங்காளர் உரையாடல் பற்றிய பட்டறையில் கொழும்பில் உரையாற்றினார் . |
| 2018 ஐப்பசி 3-5 | தவிசாளர் திரு. சாலிய பீரிஸ் உக்ரெய்ன் நாட்டில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குாணாமற் போன ஆட்களின் கதி பற்றி தெளிவுபடுத்தலும் காணாமற்போன ஆள இருக்கும் இடம் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்கான ஆதரவு பற்றிய சர்வதேச மகாநாட்டில் கலந்துகொண்டார். |
| 2018 ஐப்பசி 12-15 | ஆணையாளர்கள் திருமதி புண்ணியமூர்த்தி ஜெயதீபா, திரு. கே. வேந்தன், திரு. மீராக் ரஹீம் ஆகியோர் மட்டக்களப்பில் சிவில் சமூக டென்கோல்டர்களுடனும் காணாமற்போன காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குடும்பங்களுடன் சமூக உளவியல் OMP அலுவலகதகின பதிலிறுப்புக்களுக்கான உபாயங்கள் பறற்றிய மூன்று நாள் பட்டறையில கலந்து கொண்டனர். |
| 2018 ஐப்பசி 23-26 | ஆணையாளர் திரு. கே. வேந்தனும் ஊடக அலுவலர் திரு. பி. ருத்ரகுமாரும் இலங்கை அரசின் பல்-அமைச்சு நல்லணிக்க செயற்திட்டம் Action Plan (RAP) 2019 என்ற தலைப்பில் பேருவளையில் நடைபெற்ற பட்டறையில் கலந்து கொண்டனர். |
| 2018 ஐப்பசி 27 | தவிசாளர் திரு. சாலிய பீரிஸ், ஆணையாளர்கள் திரு. மிராக் ஹகீம மற்றும் திரு. எஸ்கே. லியனகே (சட்டத்தர்ணி) ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர்கள் ஏற்பாடு செய்த ‘‘காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தேசிய தின நினைவேந்தலில் கலந்து கொண்டனர். தவிசாளர் திரு சாலிய பீரிஸ் அங்கு சிறப்பு குறிப்புக்களை அவ்வேளை வெளியிட்டார். |
| 2018 ஐப்பசி 29 | ஆணையாளர் திரு. மிராக் ரஹீம் கொழும்பில் மனித உரிமை ஆணைக்குழு பத்திரிகையாளர் மத்தியில் மனித உரிமைகள் பற்றிய புரிந்துணர்வுக்காக ஏற்பாடு செய்திருந்த உரையாடலில் உரையாற்றினார். |
| 2018 கார்த்திகை 1 | ஆணையாளர் திருமதி புண்ணியமூர்த்தி ஜெயதீபா பால்நிலை சம்பந்தமான இடைக்கால நீதி முறைமை பற்றிய கொழும்பில் நடந்த பட்டறை ஒன்றில் கலந்துகொண்டார். |
| 2018 கார்த்திகை 10 | ஆணையாளர் கலாநிதி நிமல்கா பெர்னாண்டோ OMP பணிப்பாணையும் அது முன்னோக்கும் சவால்களும் என்ற தலைப்பில போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் ஏற்பாடு செய்து போரில் காணாமல் போன இராணுவ வீரர்களின் பெற்றோர் அழைத்திருந்த பட்டறையில் உரையாடல் நிகழ்த்தினார். |
| 2018 கார்த்திகை 19-23 | தவிசாளர் திரு சாலிய பீரிஸ், ஆணையாளர்கள் ஜெயதீபா புண்ணியமூர்த்தி, ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் மொஹாந்தி பீரிஸ் ஆகியோர் சைப்பிரஸ் நாட்டில் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஏறபாடு செய்திருந்த கல்விச் சுற்றுலாவில் கலந்து கொண்டனர். |

| | |
|---|---|
| 2018 மார்கழி 7 | ஆணையாளர் கலாநிதி நிமல்கா பெர்னாண்டோ OMP பணிப்பாணை மற்றும் சவால்களைப் பற்றிய ஒரு உரையை தேசிய சமாதானப் பேரவை சட்ட மாணவர்கள் மத்தியில் புரிந்தணர்வை ஏற்படுத்த ஆற்றினார். |
| 2018 மார்கழி 11 | ஆணையாளர் திருமதி புண்ணியமூரத்தி ஜெயதீபா OMP பணிப்பாணை பற்றி இடைக்கால நீதி பற்றி அப்பட்டறையில் உரையாற்றினார். இதில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சிவில் யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் பணியாற்றுபவர்களும் சிங்கள, தமிழ், முஸ்லிம் குடும்பங்களுக்கிடையில் உறவுகளை உருவாக்கும் பெண்கள் இருந்தனர் |

## 5. வெளித்தொடர்பு

5.1. காணாமல் போன மற்றும் கணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் அப்படி காணாமற்போனதற்கான காரணங்கள், இவ்வறான நிகழ்வுகள், அதன் விளைவுகள் பற்றிய பொதுமக்கள் புரிந்துணர்வை உருவாக்கி, உறவினர்களின் தேவைகளை நிறைவேற்றிட OMP அலுவலகத்திற்கு பணிப்பாணை உண்டு.[28] வெளித்தொடர்பு அலகு OMP அலுவலகத்தின் பணிப்பாணையையும் அது காணாமற்போன மற்றும் கணாமல் ஆக்கப்பட்டப்பட்ட ஆட்களின் குடும்பங்களின் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் செய்யும் பணியைப் பற்றிய புரிந்துணர்வையும் மேலோங்கச் செய்யுயம் குறிக்கோளைக் கொண்டது. இந்நோக்கினை முன்வைத்து OMP பொது நிகழ்ச்சிகள், ஊடக சந்திப்புக்கள், ஊடக பிரச்சாரங்கள் ஆரம்பித்தல் மற்றும் டிஜிட்டல் பிரசன்னங்களை மேற்கொண்டது.

### 2018 பொது நிகழ்ச்சிகள்

5.2. பொதுமக்களையும் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களையும் ஒன்றிணைக்கும் முயற்சிகளில் ஒன்றாக OMP ஏழு பொதுக்கூட்டங்களை நாடெங்கினும் மன்னார், மாத்தறை, முல்லைத்தீவு, திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கொழும்பு ஆகிய இடங்களில் நிகழ்த்தினர். ஓவ்வொரு நிகழ்வும் காணாமற்போனவர்கள் அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்பங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் விபரங்களை நாம் கீழே தந்துள்ளோம்.

[28] OMP சட்டம், பிரிவு 13 (j).

| திகதி | மாவட்டம் | காணாமல் போன மற்றும காணாமல் ஆக்கப்பட்ட குடும்பத்தினர் எண்ணிக்கை | பத்திரிகையாளர் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் |
|---|---|---|---|
| 2018 வைகாசி 11 - 12 | மன்னார் | 300 | சிவில் சமூக அமைப்புக்கள் 24 பேர்கள் சமூகமாயிருந்தனர்.. |
| 2018 வைகாசி 19 | மாத்தறை | 100 | சிவில் சமூக அமைப்புக்கள் 23 பேர்கள் சமூகமாயிருந்தனர். கீழ்க் காணும் தாபனங்களிலிருந்து ஊடக பிரதிநிதிகள் பிரசன்னமா யிருந்தனர்: news.lk, வீரகேசரி, ஐபிசி தமிழ், ஹிரு நியுஸ், சக்தி, சக்தி டிவி, அல் ஜசீரா |
| 2018 ஆனி 1 - 2 | முல்லைத்தீவு | 40 | சிவில் சமூக அமைப்புக்கள் 16 பேர்கள் சமூகமாயிருந்தனர். சிவில். கீழ்க் காணும் தாபனங்களிலிருந்து ஊடக பிரதிநிதிகள் பிரசன்னமா யிருந்தனர்: ஐ.ரி.என். ரிசேர்ச் போரம், மீடியா SCRM, CRD, தெரன, ஆதவன் TV, News 1st, Youth FM |
| 2018 வைகாசி 12-13 | திருகோணமலை | 760 | சிவில் சமூக அமைப்புக்கள் 38 பேர்கள் சமூகமாயிருந்தனர். சிவில். கீழ்க் காணும் தாபனங்களிலிருந்து ஊடக பிரதிநிதிகள் பிரசன்னமா யிருந்தனர்: லேக் ஹவுஸ், லங்காதீப, தகவல் திணைக்களம், சக்தி ரி.வி. பி.பி.சி, ரூபவாகிணி, தினக்குரல் |
| 2018 ஆடி 14 | யாழ்ப்பாணம் | 746 | சிவில் சமூக அமைப்புக்கள் 18 பேர்கள் சமூகமாயிருந்தனர். சிவில். கீழ்க் காணும் தாபனங் களிலிருந்து ஊடக பிரதிநிதிகள் பிரசன்ன மாயிருந்தனர்: தான்டோ, காலைக்கதிர், வசந்தம், விடிவெள்ளி, தினகரன், சக்தி எப்.எம். News 1st. |
| 2018 ஆடி 15 | கிளிநொச்சி | 20 | சிவில் சமூக அமைப்புக்கள் 13 பேர்கள் சமூகமாயிருந்தனர். சிவில். கீழ்க் காணும் தாபனங் களிலிருந்து ஊடக பிரதிநிதிகள் பிரசன்னமா யிருந்தனர்: கப்பிற்றல், உதயன், DLD TV, ITN வீரகேசரி, லங்காசிறி, வசந்தம், , News 1st, News 1st (FM). |

## ஊடகவியலாருடனான இணைவு

5.3. OMP. கீழ்க்காணும் பத்திரிகைக் குறிப்புக்களை 2018ம் ஆண்டு வெளியிட்டுள்ளது:

| திகதி | விடயம் |
|---|---|
| 2018 வைகாசி 22 | முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சந்திப்பு |
| 2018 ஆனி 06 | திருகோணமலை மாவட்ட பிராந்திய சந்திப்பு |
| 2018 ஆடி 04 | யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சந்திப்பு |
| 2018 ஆவணி16 | காணாமல் ஆக்கப்பட்டவர் பற்றிய சர்வதேச நினைவுகூர்தல் தினம் |
| 2018 மார்கழி 28 | காணாமற் பொன ஆட்கள் பற்றிய அலுவலகம் மன்னார் பாரிய மனித புதைகுழி விசாரணகளுக்கு உதவுகின்றது |

5.4. OMP. கீழ்க்காணும் ஊடக நிகழ்வுகளை நடத்தியது.

| திகதி | நிகழ்ச்சி |
|---|---|
| 2018பங்குனி 20 | தவிசாளர் திரு. சாலிய பீரிஸ் "டெய்லி மிரர்" செய்தித்தாளுக்குப் பேட்டி அளித்தார் |
| 2018பங்குனி 30 | தவிசாளர் திரு. சாலிய பீரிஸ் "டெய்லி நியூஸ்" செய்தித்தாளுக்குப் பேட்டி அளித்தார் |
| 2018பங்குனி 30 | ஆணையாளர் திரு. எஸ். கே. லியனகே "ரச" செய்தித் தாளுக்குப் பேட்டி அளித்தார் |
| 2018சித்திரை 29 | தவிசாளர் திரு. சாலிய பீரிஸ் "அநித்தா" செய்தித்தாளுக்குப் பேட்டி அளித்தார் |
| 2018 ஆடி 22 | தவிசாளர் திரு. சாலிய பீரிஸ் "வீரகேசரி" செய்தித் தாளுக்குப் பேட்டி அளித்தார் |
| 2018ஆவணி 17 | ஆணையாளர் திரு. எஸ். கே. லியனகே "அநித்தா" செய்தித்தாளுக்குப் பேட்டி அளித்தார் |
| 2018 ஆவணி 23 | தவிசாளரும் இதர ஆணையாளர்களும் பகிரங்க பத்திரிகையாளர் சந்திப்பொன்றினை தகவல் திணைக்களத்தில் மேற்கொண்டனர். |
| 2018 ஆவணி 27 | ஆணையாளர் திரு. எஸ். கே. லியனகே தினமின செய்திததாளுக்குப் பேட்டி அளித்தார் |
| 2018 ஆவணி 31 | ஆணையாளர் திரு. மிராக் றஹீம் "டெய்லி மிரர்" செய்திததாளுக்குப் பேட்டி அளித்தார் |

### தொடர்பாடல் பிரச்சாரம்

5.5. சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தையொட்டிய காலத்தில் இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய வரலாற்றை புரிந்துணர்ந்திட OMP தொடர்பாடல் பிரச்சாரத்தை மேற்கொண்டது. கீழ்க்காணும் பத்து செய்தித்தாள்களில் சிங்களம், தமிழ், ஆங்கில செய்தித்தாள்களில் விளம்பரங்கள் செய்யப்பட்டன: டெய்லி நியூஸ், ராவய, லங்காதீப, அநித்தா, வீரகேசரி, உதயன், வலம்புரி, டெய்லி மிரர், தினகரன், தினமின.

5.6. OMP டிஜிட்டல் ஊடகம், வானொலி, தொலைக்காட்சியில தொடர்பாடல் பிரச்சாரத்தை வடிவமைத்து அதனை அபிவிருத்தி செய்தது. ஐந்து விளம்பரங்கள் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் கா.போ.அலுவலகத்தின் பணிப்பாணைய மக்கள் புரிந்துணர்வு கொள்ள தயாரித்தது. இவ்விளம்பரங்கள் 2019 தை மாதம் 5ம் திகதி முதல் மாசி 28

வரைக்கும் உள்ள காலப்பகுதியில் கா.போ.அ. நிறுவப்பட்ட ஓராண்டு பூர்த்தியினையிட்டு ஒளிபரப்பாகும்.

## டிஜிட்டல் பிரசன்னம்

5.7. OMP தனது டிஜிட்டல் பிரசன்னத்தை ட்விட்டரில 2018 ஆனி 24ம் திகதி நிலைநிறுத்தியதோடு முகநூலில் ஐப்பசி 23ம் திகதி நிலைநிறுத்தியது. 2018 மார்கழி 31ம் திகதி நிலவரத்தின்படி முகநூலில் 233 பேர்களும் ட்விட்டரில் 870 பேர்களும் பின்தொடர்கின்றனர்.

5.8. OMP தனது இணையதளத்தை அபிவிருத்தி செய்யும் முன்னெடுப்பிலிருக்க 2019ம் ஆண்டின் முதலாம் காலாண்டில் அது செயற்படும் என எதிர்பாரக்கப்படுகின்றது.

## 6. நினைவேந்தல்களும் நினைவுச்சின்னங்கள் அமைப்பதும்

6.1. காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் தேவைகளை நிவர்த்தி செய்திட பொதுமக்கள் ஆதரவை உருவாக்க செயற்படவும் அக்காணாமற்போனமையை ஏற்றுக்கொள்ளவும் அவர்களுக்கான நினைவுகூர்தலையும் ஏற்பாடு செய்திட OMP அலுவலகத்திற்கு அதிகாரம் உண்டு. [29]

6.2. 2018 ஆவணி 30ம் திகதி, OMP சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை ஜே. ஆர். ஜெயவர்தன நிலையத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இலங்கையில் ஓர் அரச நிறுவனம் இத்தகைய காணமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான ஒரு நிகழ்வை நினைவு கூர்நதமை முதன் முறையாகும். நாடெங்கினுமிருந்து சிவில் சமூக அமைப்புகள், காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், இராஜதந்திர சேவை சமூகத்தினர், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மதத் தலைவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

6.3. மனித உரிமைகள் ஆணைக்குழு தவிசாளர் கலாநிதி தீபிகா உதாகம பிரதான உரையை ஆற்றினார், புத்தளம் பகுதியினைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர் திரு எம். ஷயின் ஷாபியுனிஷா, யுத்தத்தில் காணாமற் போன இராணுவ வீரரின் தாய் திரமதி விசாகா தர்மதாசா, மட்டக்களப்பில் குடும்ப உறுப்பினர் திருமதி யோகேந்திரன் வீணா , மாத்தறையில் குடும்ப உறுப்பினர் அனுலா ஆரியவதி ஆகியோர் தம் அனுபவங்களையும் காணாமற் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அபிலாஷைகளையும் OMP பற்றிய தம் எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கையையும் பகிர்ந்து கொண்டனர்.

6.4. இந்நிகழ்ச்சிக்கு முன்னர் காணாமல் போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஆகியோரை பிரதிநிதிப்படுத்தும் சிவில் சமூக அமைப்புக்கள் பொதுமக்கள் மத்தியில் வலிந்து காணாமல் ஆக்கபடுகை சம்பந்தமான பரந்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக விகாரமகாதேவி

[29] OMP சட்டம், பிரிவு 13(1)(j),(k)(ii).

பூங்காவிலிருந்து லிப்டன் சுற்றுவட்டம் வழியாக ஜே.ஆர். ஜெயவர்தன நிலையத்திற்கு ஊர்வலம் ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தனர்.

6.5. மேலும் தனது இடைக்கால அறிக்கையில், காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் நீண்டகாலமாய் ஓரம்கட்டப்பட்டமையை அடையாளம் கண்டு "தேசிய காணாமல் ஆக்க்பபட்டோர் தினம்" என்ற தினம் குறிப்பிடுதல், "அகிம்சகாராமய" எனப்படும் பத்தரமுல்லையில் "மாசற்றோர் நினைவுச் சின்னத்தை புனரமைத்தல், பாரிய மனித புதைகுழிகளை நினைவிடங்களாக மாற்றுதல் உட்பட நினைவுகூரல் சம்பந்தமாக பல பரிந்துரைகளை செய்தது.

## 7. நிதி செலவு அறிக்கை

**2018 ஆடி 1ம் திகதி முதல் 2018 மார்கழி 31 வரை**

"கா.போ.அலுவலகம் 2018 மாசி மாதம் நிறுவப்பட்டுதேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அமைச்சினா 2018 ஆடி மாதம் வரை நிதி விவகாரங்கள் நிர்வகிக்கப்பட்டு வந்தது.. கா.போ.அ. நிதிமற்றும் கொளவனவு பிரிவு அதன் நிதி நிர்வாகத்தை 2018 ஆடி மாதம் முதல் ஆரம்பித்தது.

(எல்லா இலக்கங்களும் இலங்கை ரூபாயில்)

| | விபரம் | (இலங்கை ரூபாவில்) மொத்தம் |
|---|---|---|
| 1 | அசையா சொத்துக்கள் | 7,718,695.00 |
| 2 | தனியார் சம்பளங்கள் | 14,504,943.00 |
| 3 | பாரிய மனித புதைகுழிகளை அகழ்வதும் அடையாளம் காண்பதும் | 1,487,545.00 |
| 4 | தொடர்பாடல் | 1,094,518.21 |
| 5 | வெளியரங்க நிகழ்ச்சிகள் | 2,776,290.61 |
| 6 | பணியாளர் பயிற்சி | 95,750.00 |
| 7 | போக்குவரத்துச் செலவு | 537,281.00 |
| 8 | வெளிநாட்டுப் பயணம் | 335,585.00 |
| 9 | கட்டிட பராமரிப்பு | 835,320.00 |
| 10 | உள்ளக சந்திப்புக்கள்-கூட்டங்கள் | 185,846.00 |
| 11 | தரவு பொருட்கள் | 839,386.18 |
| 12 | இதர சேவைகள் | 38,840.00 |
| | **மொத்தம்** | இ.ரூ. **30,450,000.00** |

**காலாண்டு செலவு அறிக்கை-2018 ஆடி 1 முதல் 2018 மார்கழி 31வரை (எல்லா இலக்கங்களும் இலங்கை ரூபாய்களில்)**

| இல. | விபரம் | ஆடி – புரட்டாதி | ஐப்பசி-மார்கழி | மொத்தம் (இலங்கை ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | அசையா சொத்துக்கள் | 196,533.00 | 7,522,162.00 | 7,718,695.00 |
| 2 | தனியார் சம்பளங்கள் | 7,760,676.00 | 6,744,267.00 | 14,504,943.00 |
| 3 | பாரிய மனித புதைகுழிகளை அகழ்வதும் அடையாளம் காண்பதும் | 576,785.00 | 910,760.00 | 1,487,545.00 |
| 4 | தொடர்பாடல் | 691,648.00 | 402,870.21 | 1,094,518.21 |
| 5 | வெளியரங்க நிகழ்ச்சிகள் | 2,425,090.61 | 351,200.00 | 2,776,290.61 |
| 6 | பணியாளர் பயிற்சி | 45,000.00 | 50,750.00 | 95,750.00 |
| 7 | போக்குவரத்துச் செலவு | 198,300.00 | 338,981.00 | 537,281.00 |
| 8 | வெளிநாட்டுப் பயணம் | | 335,585.00 | 335,585.00 |
| 9 | கட்டிட பராமரிப்பு | 236,330.00 | 598,990.00 | 835,320.00 |
| 10 | உள்ளக சந்திப்புக்கள்-கூட்டங்கள் | 53,030.00 | 132,816.00 | 185,846.00 |
| 11 | தரவு பொருட்கள் | 298,812.79 | 540,573.39 | 839,386.18 |
| 12 | இதர சேவைகள் | 10,750.00 | 28,090.00 | 38,840.00 |
| | **மொத்தம்** | | | இல. ரூ **30,450,000.00** |

# காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (கா.ஆ.அ)

# இடைக்கால அறிக்கை

2018 ஆவணி

# இடைக்கால அறிக்கை


| | | |
|---|---|---|
| | நிறைவேற்றுச் சாராம்சம் ........................................................................... | 3 |
| 1. | காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ............................................ தற்போதைய நடவடிக்கைகள் | 5 |
| 2. | சவால்கள் ........................................................................... | 9 |
| 3. | நீதியை உறுதிப்படுத்துவதற்கான அரச பொறுப்பு ............................................... | 13 |
| 4. | இழப்பீடுகளை வழங்குவதற்கான அரச பொறுப்பு................................................... | 17 |
| 5. | அவசரமான பரிந்துரைகள்........................................................................... | 19 |
| 5.1 | இடைக்கால நிவாரண முன்மொழிவுகள்............................................................ | 20 |
| 5.2 | நீதிக்கான பரிந்துரைகள்.......................................................................... | 22 |

# நிறைவேற்றுச் சாராம்சம்

காணாமற் போனோர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளின்போது, **காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்** முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருப்பு முனையைக் குறிக்கிறது. 2016 இன் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகச் சட்டம் *(தாபித்தலும் / நிருவகித்தலும்/ பணிகளை நிறைவேற்றுதலும்)* சுயாதீன ஆணைக்குழு என்ற வகையில் நிறுவப்பட்டுள்ளது. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் குறிக்கோள்: காணாமற் போனோரைத் தேடுதல் மற்றும் அவர்களைப்பற்றிக் கண்டறிதல், இத்தகைய சம்பவங்கள் மீள நிகழ்வதைத் தடுப்பதற்குப் பரிந்துரைகளை முன்வைத்தல், காணாமற்போனோரினதும் அவர்களது உறவினர்களதும் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய வகையில் உத்தரவாதங்களை மேற்கொண்டு, நிவாரணங்களை வழங்குவதற்கு உசிதமான நடவடிக்கைகளை அறிமுகம் செய்தல் என்பனவாகும்.

2018 மாசி மாதத்தில், ஏழு (7) ஆணையாளர்களின் நியமனத்தோடு அலுவலகத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. குறிப்பிட்ட அலகுகளையும், பிரதேச அலுவலகங்களையும் அமைத்தல் - தாபித்தல், அலுவலகப் பணியாளர்களை ஆட்சேர்த்தல் மற்றும் கொள்கைகள், ஒழுங்குவிதிகள், செயல்முறைகள் என்பவற்றை உருவாக்குதல் என்பன காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் நடவடிக்கைளில் உள்ளடக்கப்படும். அதேசமயம், காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப அங்கத்தவர்களோடு பொதுக் கலந்துரையாடலிலும் ஈடுபட்டது. அத்தோடு, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுக்கும் சந்தர்ப்பங்களில் அந்தரங்கமான சந்திப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. சட்ட வைத்தியத் தரவுகளை ஆவணப்படுத்துதல் போன்ற விசேட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவசியமான விஞ்ஞானரீதியான அறிவைப் பெறுவதற்கு காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களின் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றதோடு, அரச நிறுவனங்கள் மற்றும் சில சர்வதேச நிறுவனங்களுடனும் இணைந்து செயற்பட்டு வருகின்றது. மேலும், சில விசேட சம்பவங்கள் பற்றிய பரிசீலனைகளையும் மேற்கொண்டது. குறிப்பாக மன்னாரில் கூட்டுப் புதைகுழிகளை அகழ்வதற்கும், தோண்டி எடுப்பதற்கும் அவசியமான உதவிகளை வழங்கியதோடு, காணாமற் போன ஆட்கள்பற்றி நிலவும் அறிக்கைகளைத் தொகுத்து, பாதிக்கப்பட்டோர் மற்றும் அவர்களது குடும்பங்கள் மீதும் தாக்கம் செலுத்தும் சட்டரீதியான பிரச்சினைகளைப்பற்றிய பரிந்துரைகளையும், விளக்கங்களையும் தயாரித்துள்ளது.

அதனிடையே, பல ஆண்டுகளாக பௌதீக மற்றும் உளவியல் அழுத்தங்களைச் சுமந்துகொண்டு உயிர்வாழும் பாதிக்கப்பட்ட குடும்பங்களினது தேவைகளின் அத்தியாவசியத் தன்மைகளை சமநிலைப்படுத்தல் உட்பட பல சவால்களை காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் எதிர்நோக்குகின்றது. தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று அறிவதிலேயே காணாமற்போன

ஆட்களின் குடும்பங்கள் அதிக அக்கறை செலுத்துகின்றன. இதுவரை இது பற்றிய உண்மையான தகவல்களை அரசினால் வழங்க முடியாமையினால் அரசு மீது பாரிய சந்தேகம் உருவாகி உள்ளது. இதன் காரணமாக காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் மீதும் அவர்களுக்குப் பாரிய நம்பிக்கையீனமே உள்ளது. இக் குடும்பங்களின் பல்வேறு தேவைகைளையும் நிலைப்பாடுகளையும் புரிந்து கொண்டு, அவர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் அவசியத்தை நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் பயனுறுதிவாய்ந்ததாக அமைவதற்கு அரசின் ஏனைய நிறுவனங்களின் நேரடியான ஒத்துழைப்பு அவசியம். காணாமற் போனோரின் உரிமைகள் மீறப்பட்டதற்கு ஈடாக பாதிக்கப்பட்டோரின் இழப்பினை ஈடு செய்வதற்கு ஒரு வேலைத்திட்டம் அவசியமாகும். எனவே, நம்பகத்தன்மை வாய்ந்த முறையில் பயனுறுதிவாய்ந்த இழப்பீட்டிற்கான ஓர் அலுவலகத்தை தாபிப்பதற்கு சட்டங்களை தயாரிப்பது மிக அவசியமாகும்.

குடும்பங்களின் வருமானத்தை ஈட்டுபவர்கள் காணாமற்போதலினால், அக்குடும்பங்கள் எதிர்நோக்கியுள்ள மிகத்துன்பகரமான நிலைமையும் அதன் காரணமாக ஏற்பட்டுள்ள தேவைகளையும் நாம் அடையாளம் கண்டுள்ளோம். மேற்படி குடும்பங்களின் தேவைகளே இவ்வறிக்கைக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. மேற்படி தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கியே பல இடைக்கால நிவாரணங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், குடும்பங்களின் சேமநலனை குறிக்கோளாகக் கொண்டு இந்த இடைக்கால நிவாரணங்கள் எவ்விதத்திலும் இழப்பீடுகளாக அமைய மாட்டாது என்பதை வலியுறுத்த வேண்டும். காணாமற்போன குடும்பங்கள் இந்த இடைக்கால நிவாரணங்களை அரசிடம் இருந்து ஏற்பது அவர்களின் இழப்பீடுகளுக்கு உரித்தான உரிமைகளுக்கு எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது என்பதனை விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

அதேசமயம், காணாமற்போன ஆட்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு நீதியை நிலைநாட்ட வேண்டிய ஏற்பாடுகளை காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் அடையாளம் கண்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு பங்குணி மாதத்தில் அரசாங்கம் வலிந்து காணாமற் போகச் செய்தல்மூலம் அனைத்து ஆட்களையும் பாதுகாப்பதற்கான அரசுகளுக்கிடையிலான சமவாயச் சட்டத்தை (வலிந்து காணாமற்போகச் செய்தல் பற்றிய சட்டத்தை) அங்கீகரித்தல் மூலம் வலிந்து மேற்கொள்ளப்படும் காணாமற் போகச் செய்தல் குற்றவியல் குற்றமாக அடையாளம் காணுதல், அரசியலமைப்பின் அரச பொறுப்புக்களை வலியுறுத்தி, அதற்கு ஏற்புடைய சட்டங்களை அடையாளம் காணுதல் ஒரு சாதகமான நடவடிக்கை என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.

அதே சமயம், வலிந்து காணாமற் போகச் செய்தல் குற்றவியல் குற்றமாக அடையாளம் காணுதல் மாத்திரம் போதுமானதாக அமையாது. நீதியை நிலைநாட்டுவது தொடர்பாகவும் மறுசீரமைக்க வேண்டிய பல துறைகளைப்பற்றியும் நாம் அடையாளம் கண்டுள்ளோம். விசேடமாக உரிமைகளை மீறுதல் பற்றிச் செயற்படும் குடும்பங்களும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக

நடவடிக்கை மேற்கொள்ளும் செயற்பாட்டாளர்களும், துன்புறுத்தல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாவதற்கு எதிராக துரிதமாக உரிய நடவடிக்கை எடுப்பது தாமதமாகின்றது. எனவே, இத்தகைய சவால்களை அகற்றுவது அவசரத் தேவையாகும் என வலியுறுத்துகின்றோம்.

## 1. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தற்போதைய நடவடிக்கைகள்

1. 2018 மாசிமாதம் 28 ஆம் திகதி மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் **காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின்** தவிசாளருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்குமான நியமனக் கடிதங்கள் ஒப்படைக்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து ஆறு மாத காலத்திற்குள் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நிறைவேற்றிய பணிகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம். அதன் பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான கட்டமைப்புகளும், செயல்முறைகளும் தாபிக்கப்பட்டதுடன் காணாமற்போன ஆட்களின் குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணங்களை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டம் - 2016 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகச் சட்டம் (தாபித்தலும், நிருவகித்தலும் பணிகளை நிறைவேற்றுதலும்) இவ்வலுவலகத்தின் முக்கிய நான்கு பணிகளைக் குறிப்பிடுகின்றது. 1) காணாமற்போன ஆட்களைத் தேடுதல் மற்றும் தேடிக் கண்டுபிடித்தல் 2) மேற்படி காணாமற்போன ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சூழமைவுபற்றிய விடயங்கள் மற்றும் அவர்களின் நிலையை தெளிவுபடுத்துதல் 3) காணாமற்போன ஆட்கள்பற்றிய சம்பவங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இத்தகைய நிகழ்வுகள் மீள நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் ஏற்புடைய நிறுவனங்களுக்கு பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல். 4) உரிய இழப்பீட்டு மார்க்கங்களை அறிமுகப்படுத்துதல்.

3. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகச் சட்டத்தின்மூலம் நிரந்தரமான அலுவலகம் ஒன்று நிறுவப்படுவதோடு காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் என்போர் யுத்தம், அரசியல் அமைதியின்மை அல்லது சிவில் கிளர்ச்சிகள், கலகங்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்குதல் உட்பட்ட சூழ்நிலைகளில் “எவராவது ஓர் ஆளுக்கு ஏற்பட்ட நிலை அல்லது அவர் இருக்கும் இடம் நியாயமான முறையில் அறியவில்லையென நம்புகின்ற அந்த நபர்” என்ற வகையில் ஒரு நபர் வரைவிலக்கணம் செய்யப்படுகிறார்.

4. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நெறிப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு காணாமற்போன ஆட்கள் பற்றிய

அலுவலகச் சட்டம், இலங்கையின் தேசிய சட்டங்கள் மற்றும் ஏற்புடைய ஏனைய சர்வதேசச் சட்ட கடப்பாடுகள் வழிகாட்டியாக அமையும்.

**அலுவலகத்தின் நடவடிக்கைகளை செயற்படுத்துதல்**

5. அலுவலகத்தின் நடவடிக்கைகளை செயற்படுத்துதல் கா.ஆ.அ உறுப்பினர்களால் உடனடியாக நிறைவேற்றப்பட வேணடியதாக இருந்தது. இதன் பணிகளை அமுலாக்குவதற்கு வேறு அலகுகளை உருவாக்கும்வரை, இடைப்பட்ட காலத்தில் பாதிக்கப்பட்டோரை மையப்படுத்தி, அவர்களை பிரதிபலிக்கக்கூடிய வகையிலும், பயனுறுதிவாய்ந்த ஒத்துழைப்பை உறுதிப்படுத்தும் வகையிலும், நடத்தைக்கோவை, வழிகாட்டிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்குவதற்கு கா.ஆ.அ ஈடுபாடு கொண்டுள்ளது.

கா.ஆ.அ எண்ணக்கரு மற்றும் அமுலாக்கம் என்பன இச்செயல்முறைக்கு ஏற்புடைய தேசிய மற்றும் சர்வதேச சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதோடு. கா.ஆ.அ சட்டம், நல்லிணக்கம் பற்றிய கலந்தாலோசனைச் செயலணி (CTF) மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுப்பாய்வின் அடிப்படையில், ஆலோசனை உட்பட முன்னைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளும் கவனத்தில் கொள்ளப்படும். கா.ஆ.அ தற்போது தற்காலிகமாக ஊழியர்களை சேவைக்கமர்த்தியுள்ளதுடன், அலுவலகத்திற்கான நிரந்தர ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு அரசாங்கத்திடம் இருந்து அங்கீகாரம் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வலுவலகம் தற்காலிகமாக இல.34, நாரஹேன்பிட்ட வீதி, நாவல எனும் முகவரியில் அமைந்துள்ளதுடன் நிரந்தரமான பிரதான அலுவலகத்தை கொழும்பில் நிறுவுவதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றது. அத்துடன், நாடு பூராகவும் உள்ள குடும்பங்கள் இலகுவில் அலுவலகத்தை அணுகுவதை உறுதிசெய்வதற்கு கா.ஆ.அ மூலம் பிரதேச ரீதியாக 12 பிராந்திய அலுவலகங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளன. மன்னார் மற்றும் மாத்தறை ஆகிய இடங்களில் இரண்டு அலுவலகங்கள் இவ்வாண்டு முடிவடைவதற்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டு அவற்றின் பணிகளை செயற்படுத்தும்.

**பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுடன்மேற்கொண்ட கலந்துரையாடல்கள்**

6. காணாமல் போனவர்களின் குடும்பத்தினருடன் தொடர்புகொண்டு கலந்தாலோசிப்பது கா.ஆ.அ பயன்படுத்திய முக்கிய கருவியென நிரூபிக்கப்பட்டது. கா.ஆ.அ நாடுபூராகவும் மன்னார், மாத்தறை, முல்லைத்தீவு, திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் 2147 நபர்களுடன் ஆறு பொதுமக்கள் சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக கா.ஆ.அ தவிசாளரையும், உறுப்பினர்களையும் சந்திக்க வேண்டுமென எதிர்பார்த்த, காணாமற்போன ஆட்களின் குடும்ப உறுப்பினர்களையும் கொழும்பில் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இச்சந்திப்பின் மூலம் கா.ஆ. அலுவலகம், அதன் உத்தேச

நடவடிக்கைகள் என்பன பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்த முடிந்தது. இது அவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்கு சிறந்த சந்தர்ப்பமாக அமைந்தது.

குடும்பங்களை நேரடியாகச் சந்திப்பதன்மூலம், அனைத்து இனங்களையும் சார்ந்த குடும்பங்களின் விபரங்களை கேட்டறிவதற்கும் தமது அன்புக்குரியவர்கள் காணாமற் போனமையால் ஏற்பட்ட அதிர்ச்சியான அனுபவங்களையும், அவர்களின் துன்ப துயரங்களின் அளவையும் அறியமுடிந்தது. ஒரே இனத்தைச் சார்ந்திருந்தாலும், ஒரே பிரதேசத்தில் வாழ்ந்தாலும் அவர்களின் மனப்பாங்குகள், தேவைகள், விருப்புகள் என்ற பல்வேறு விடயங்கள்பற்றிய புரிதல்களுக்கு இது சிறந்த சந்தர்ப்பத்தை வழங்கியது.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் வாழ்ந்துவரும் குடும்பங்களும், சிவில் சமூகக் குழுக்களும் இணைந்து முன்வைத்த பரிந்துரைகளான…

I. மிகவும் கஷ்டமான பிரதேசங்களுக்கு நடமாடும் அலுவலகங்கள் ஸ்தாபிக்கப்படுதல்
II. 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் காணாமற்போனோர் பற்றிய சம்பவத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுதல்

என்கின்ற பரிந்துரைகளை கா.ஆ.அ கவனத்தில் எடுத்து செயற்படவுள்ளது.

**உள்நாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்கள், அரச நிறுவனங்களுடனான கலந்தாலோசித்தலும் ஒத்துழைப்பும்**

8. கா.ஆ.அ தேசிய, சர்வதேச அமைப்புக்கள் மற்றும் காணாமற்போன ஆட்கள்பற்றி கண்டறிதல், புதைகுழிகளைத் தோண்டுதல், மனித எலும்புக்கூடுகளை புதைகுழிகளில் இருந்து வெளியே எடுத்தல், சட்டவைத்திய அறிவியல், மரபு உரிமை விஞ்ஞானம், உளசமூக ஒத்துழைப்பு, சட்டநடவடிக்கைகள், ஆவணப்படுத்தல், தரவுகளை திரட்டி முகாமைத்துவம் செய்தல், மற்றும் சுவடிகள் பற்றிய தேர்ச்சிபெற்ற நபர்களோடு இருதரப்பு மற்றும் கூட்டான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. கா.ஆ.அ மூலம் காணாமற்போனோர் பற்றிய அலுவலகமாக சமமான கடமைகளைப் புரியும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட – அரச மற்றும் அரசு சார்பற்ற இருதரப்பினரும் குறிப்பாக சர்வதேச நிறுவனங்களின் அனுபவங்கள், கருத்துக்கள், கற்கைகள் மற்றும் யோசனைகள் என்பன பெற்றுக்கொள்ளப்பட்டன.

அதேசமயம், அலுவலகம் ஒருசில அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதற்கான பங்காளர்களை உருவாக்கியுள்ளது. கா.ஆ.அ க்கான பொதுமக்கள் சந்திப்புக்களை மாவட்டச் செயலகங்கள் ஏற்பாடு செய்தன. இதனைவிட, ஜனாதிபதி செயலகம், பிரதமரின் அலுவலகம், சபாநாயகரின் அலுவலகம், தேசிய ஐக்கியத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சு. நல்லிணக்கப் பொறிமுறைகளை கூட்டிணைப்பதற்கான செயலகம் (SCRM), சட்ட வைத்திய அதிகாரிகள் மற்றும் அரச தகவல் திணைக்களம் உட்பட்ட அரசாங்க நிறுவனங்களும் ஏனைய

பிற நிறுவனங்களினதும் பயனுறுதிவாய்ந்த பங்களிப்பு எமது செயற்பாடுகளுக்கு மிகவும் பிரயோசனமாக அமைந்தது.

**விசாரணையும் தேடலும்**

9. கடந்த சில மாதங்களாக கா.ஆ.அ மூலம் சில விசேட சம்பவங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விசாரணை மேற்கொள்வது உட்பட பாதிக்கப்பட்டோரின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் பாதுகாக்கப்படுதலை உறுதிப்படுத்துவதற்கு அதன் அடிப்படை நடவடிக்கையான புலனாய்வு மற்றும் தேடல் தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கா.ஆ.அ மூலம் மன்னார் கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய (சதொச) கட்டிடத்தில் உள்ள கூட்டுப் புதைகுழி தொடர்பாக அவதானிப்பதோடு அவற்றின் அகழ்வாராய்ச்சிகளுக்கும், மனித எலும்புக்கூடுகளை வெளியே எடுக்கும் நடவடிக்கைளுக்குமான நிதி அனுசரணையையும் கா.ஆ.அ வழங்குகிறது. இந்த நடவடிக்கைகளை நேரடியாகவும், தடைகளின்றியும் வெளிப்படைத் தன்மையோடும் தொடர்ச்சியாகவும் முன்னெடுப்பதை உறுதிப்படுத்துவதற்கும், விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் கா.ஆ.அ தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கும்.

**சட்டரீதியான மற்றும் கொள்கை ரீதியான இடையீடுகள்**

10. நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சட்ட மற்றும் கொள்கை ரீதியான மறுசீரமைப்புக்களுக்கான பங்களிப்பை வழங்குவதன் பொருட்டும் கா.ஆ.அ இடையீடு செய்ததோடு காணாமற்போன ஆட்களின் குடும்பங்களைத் தொடர்ந்தும் சிரமத்துக்கு உட்படுத்தாத வகையில், இச்சட்டங்களையும் கொள்கைகளையும் பற்றி கூடிய புரிதலை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திடீர் மரணங்கள் தொடர்பாக இடம்பெறும் மரண விசாரணைகளின்போது வருகை தராமைக்கான சான்றிதழ் (Certificates of Absence) தொடர்பான பிரச்சினைகளுக்கு ஏற்புடைய உத்தேச சட்டம் கா.ஆ.அ மூலம் மறுசீரமைத்து பரிந்துரை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை சட்ட மறுசீரமைப்புகளில் உள்ளடக்கப்படும்.

**காணாமற்போன ஆட்கள்பற்றிய பெயர்பட்டியலைத் தயாரித்தல்**

11. அரச நிறுவனங்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் சிவில் சமூகங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட காணாமற்போன ஆட்கள்பற்றிய பல்வேறுபட்ட பெயர்ப்பட்டியல்கள் இருப்பது மிக முக்கியமானதென கா.ஆ.அ அடையாளம் கண்டுள்ளது. இதற்கமைய, எமது அலுவலகத்தின்மூலம் இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கும் அதன் பணிகளை ஏனைய நிறுவனங்களும் தாபனங்களும் இடையீடு செய்யக்கூடிய வகையில் கேந்திர பெயர்ப்பட்டியலைத் தயாரிக்கும் பாரதூரமான கடமை பொறுப்பேற்கப்பட்டுள்ளது. இதற்கமைய, கா.ஆ.அ இதுவரை, முன்னர் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின்

அறிக்கைகள் உட்பட தற்போதுள்ள அறிக்கைகளை சாராம்சப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

## 2. சவால்கள்

கடந்த ஆறு மாத காலத்திற்குள் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் பின்வரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளது.

**காணாமற்போன சூழமைவு**

12. கா.ஆ.அ இன் செயற்பாடுகள் சமூகத்தின் சில பகுதியினரால் காணாமற்போதல் பற்றிய பிரச்சினைகளுக்காக நடவடிக்கை எடுக்கும் அவசியம் கூட கேள்விக்கு உட்படுத்தப்படும் சூழமைவிலேயே அமைந்துள்ளது. ஒருபுறம், யுத்தத்தின் பெறுபேறாக ஏற்பட்ட காணாமற்போதல் பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தேவையும் மறுபுறம் கா.ஆ.அ போன்ற நிறுவனங்களின் அவசியம் பற்றிய விவாதமும் இடம்பெறுகின்றது, காணாமற்போதல் நிலைபேறான நீதி பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள்நாட்டுப் பொறிமுறைகளின் வரலாற்று ரீதியான இயலாமை மற்றும் அரசதுறையின் மிகக் குறைந்த அர்ப்பணிப்பு என்பன கா.ஆ.அ க்கான கடினமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

சுயாதீனமானதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான ஒரு நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கு சமாந்தரமாக, நீதி, உண்மையைக் கண்டறிதல், இழப்பீடு மற்றும் நிறுவன மறுசீரமைப்பு உட்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அரசாங்கம் வாக்குறுதி அளித்தவாறு, விசேட பொறிமுறைகளை அமைப்பதற்காக அரசாங்கத்தை ஊக்குவிக்கும் முக்கியத்துவத்தை கா.ஆ.அ அடையாளம் கண்டுள்ளது.

**குடும்பங்களுக்கும் சிவில் சமூகங்களுக்குமுள்ள அவநம்பிக்கையும் சந்தேகமும்**

13. பாதிக்கப்பட்டோரது உறவினர்களின் நம்பிக்கையை வென்றெடுத்தல், பிரதானமாக இவ்வலுவலகம் பயனுறுதிவாய்ந்த, சுயாதீனமான, நம்பகத்தன்மை கொண்ட தேசிய நிறுவனமாக, பிறர் ஏற்றுக்கொள்ளும் வகையில் நம்பிக்கையை வென்றெடுத்தல், விசேட சவால்மிகுந்ததென காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் கண்டறிந்துள்ளது. மனித உரிமைகளை மீறுவதற்கு பரிகாரம் காணுதல் அரச நிறுவனங்களின் இயலுமை மற்றும் விருப்பம், என்பன விசேடமாக பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கிடையே உள்ள ஆழமான வெறுப்பு மனப்பான்மை (Cynicism), காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் மீது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்த வெறுப்பு மனப்பான்மை பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கடந்தகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

14. அடிப்படைக் கருத்துக்களை விசாரித்தபோது காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்பற்றிய கலப்புணர்வுகளின் பிரதிபலிப்பைச் சந்திக்க முடிந்தது. ஒருசில குடும்பங்கள் இவ்வலுவலகம் பற்றிய கடும் வெறுப்பு மனப்பான்மையையும் நம்பிக்கையீனத்தையும் வெளிப்படுத்தியதோடு, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பொதுமக்கள் சந்திப்பின்போது எதிர்ப்பு ஆர்ப்பாடடங்களும் இடம்பெற்றன. மேலும் சிலர் அதிக நம்பிக்கைக்குப் பாத்திரமான சாதகமான பிரதிபலிப்புக்களையும் வெளிப்படுத்தினர். இதன்போது வேறுசிலர் விசேட நிபந்தனைகளை முன்வைத்து, இவ்வலுவலகத்துடன் தொடர்புகொள்ள முயற்சித்தனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு வேறு மாற்று வழியின்மையால் அவர்கள் தமது தேவைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான மற்றுமோர் அரச நிறுவனமாகவே காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தைக் கருதுகின்றனர்.

அதேசமயம், காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பொதுமக்கள் சந்திப்புக்களின்போது தமது வருகையைத் தடுப்பதற்கு எதிர்ப்புக் காட்டுவோர் முயற்சித்த முறையைப்பற்றி சிவில் சமூகங்களுக்கூடாக காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்குக் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வலுவலகத்துடன் தொடர்புகொள்வதா? இல்லையா? என்று தமது தீர்மானங்களை மேற்கொள்வதற்கு குடும்பங்களுக்கு உள்ள உரிமை போன்றே அனைத்துக் குடும்பங்களினதும் உரிமைகளை மதிப்பது முக்கியமானதென காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் வலியுறுத்துகிறது.

15. இக்குடும்பங்களின் காணாமற்போன உறவுகளை தேடுகையில் அவர்கள் எதிர்நோக்கிய துன்பங்களையும் துயரங்களையும் நீண்டகால பெருமுயற்சிகளையும், ஆணையாளர்கள் புரிந்துகொள்வதோடு, மேற்படி குடும்பங்கள்மூலம் எடுத்துக்காட்டப்படும் துணிவும், திடசங்கற்பமும் பாராட்டுக்குரியது.

16. பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கிடையே பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் பன்முகத்தன்மை, அவர்களின் தேவைகள் மற்றும் பல்வேறு கருத்துக்கள் என்பவற்றை காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் புரிந்துகொண்டுள்ளது. இவ்வலுவலகம் ஆலோசனைகளைப் பெறுவதற்கும், தாக்கத்திற்குள்ளான அனைவரினது பெறுமதிமிக்க தகவல்களை பேணிப்பாதுகாப்பதற்கும், அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் எதிர்ப்புத்தெரிவித்த மற்றும் தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்து கொண்டிருக்கின்ற நபர்கள் உட்பட, பாதிப்புக்குள்ளான அனைத்துக் குடும்பங்களுடனும், சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடனும் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

## போதிய விழிப்புணர்வின்மை

17. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் அதன் பணிகள்பற்றி நிலவும் தவறான புரிதலைப்பற்றி அறிந்துள்ளது. இதன்மூலம் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய விசேட குழுக்களைப் புறக்கணிப்பதாகவும், இது ஒரு நீதிமன்ற நடைமுறையாகுமென்ற தவறான நம்பிக்கைகள், இந்தத் தவறான புரிதலுக்குக் காரணமாகும். சில குடும்பங்களுக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கும் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடு பற்றிய புரிதல் அல்லது அறிவு இல்லையென்றே கூறவேண்டும். இத் தவறான புரிதலை இல்லாதொழிப்பதும், இவ்வலுவலகத்தின் பணிகள் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின்மூலம் தொடர்பாடல் மற்றும் பொதுமக்களைச் சென்றடைதல் பற்றிய சிறந்த உபாய மார்க்கத்தைக் கட்டியெழுப்பி, அமுல்படுத்தும் செயற்பாட்டில் அது ஈடுபட்டுள்ளது.

## நிருவாகச் சவால்கள்

18. காணாமற் போன ஆட்கள்பற்றிய அலுவலகம் பல்வேறு நிர்வாகச் சவால்களை எதிர்நோக்கியது. காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகத்தின் நடவடிக்கைகள் தாமதமாவதற்கும், மேலதிகமான பல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அது அழுத்தத்தைக் கொடுத்தது. முக்கியமான பல அரச நிறுவனங்கள் காணாமற் போன ஆட்கள்பற்றிய அலுவலகத்தை சுயாதீனமான நிறுவனமாக அடையாளம் காணாமை பாரிய சவாலாக அமைந்தது. இதனைப் புரிய வைப்பதற்கு காலத்தை செலவுசெய்ய வேண்டி ஏற்பட்டது. இதனாலேயே சில தாமதங்கள் ஏற்பட்டன.

அதேசமயம் அரசியலமைப்பிற்கான 19ஆவது திருத்தத்தில் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களைப் போலவே, இவ்வலுவலகத்தின் தவிசாளரினதும் ஏனைய உறுப்பினர்களினதும் சம்பளங்கள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டி இருந்தது. உத்தியோகத்தர்களை நியமிக்கும்போதும், பொருட்களின் பெறுகையின்போதும் அனுசரிக்க வேண்டிய ஒழுங்குமுறைகள் மற்றும் அங்கீகாரம் தாமதமாகியமை மற்றுமோர் சவாலாகும். காணாமல்போன ஆட்கள்பற்றிய அலுவலகத்தை அரசியலமைப்பிற்கு அமையவும், ஏனைய சட்டங்களுக்கமையவும், சுயாதீனமான நிறுவனமாக அடையாளம் காண்பது அதன் பயனுறுதிவாய்ந்த செயற்பாட்டிற்கு அத்தியாவசியமாகும்.

## தொடர்ச்சியான துன்புறுத்தல்களும் வன்முறைகளும்

19. காணாமற் போனோரினதும் காணாமல் ஆக்கப்பட்டோரினதும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பல்வேறு வன்முறைகள் மற்றும் தொந்தரவுகள் தொடர்பாக, காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகம் அறிந்துள்ளது. கடந்தகால ஆணைக்குழுக்கள் மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான ஆலோசனை செயலணிக்கு கிடைத்துள்ள, பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கமைய பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பெண் உறுப்பினர்கள் பாலியல்

தொந்தரவுகளுக்கும், பல்வேறு இலஞ்சங்களுக்கும் ஆளானார்கள் என்று அறிக்கையிடப்பட்டிருந்தது.

சில காணாமற்போனோரினதும், காணாமல் ஆக்கப்பட்டோரினதும் குடும்ப உறுப்பினர்கள், காணாமற் போனோர் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு அல்லது சில நிருவாக நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு, பாலியல் இலஞ்சம் கோரப்பட்ட சந்தர்ப்பங்களும் அறிக்கையிடப்பட்டிருந்தன. 2018 ஆடி 06 ஆம் திகதி அடையாளம் காணப்படாத ஒரு குழுவினால் திருமதி அமித்தா பிரியந்தி, அளுத்கம பிரதேசத்தில் தாக்குதலுக்கு ஆளானார். அதேசமயம் 2018 ஆடி 13 ஆம் திகதி வட்டுக்கோட்டை பிரதேசத்தில் திருமதி ஸ்ரீசோபனா யோகலிங்கம் தாக்கப்பட்டார். இவ்விடயங்கள் தொடர்பாக எமது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறாக தொடர்ந்தும் இடம்பெறும் அச்சுறுத்தல்கள்பற்றிய முறைப்பாடுகள் பாதிக்கப்பட்டோர்கள், பிரதிவாதிகள், உறவினர்கள், சட்டத்தரணிகள் மற்றும் சாட்சிகள் ஆகியோர் எதிர்நோக்கிய பிரச்சினைகளாகும். அரசின் நீதிபரிபாலன செயல்முறை தொடர்பான நம்பிக்கை வீழ்ச்சியடைவதற்கும், இவை காரணமாக அமைந்துள்ளன என நாம் நம்புகிறோம்.

**அவசரமானதும் சிக்கலானதுமான பொறுப்புக்கள்**

20. அரசு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அடிப்படை விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு தாமதித்தமையும், காணாமற்போனோரினதும் காணாமல் ஆக்கப்பட்டோரினதும் குடும்ப உறுப்பினர்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்யவதற்கும் காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகச் சட்டம் சட்டமாக்கப்படுவதற்கு முக்கிய காரணங்களாகும். எவ்வாறாயினும் மீண்டும் நம்பிக்கை முறிதல் இடம்பெறக் கூடாது என்பதன்பொருட்டு மிகவும் பயனுறுதிவாய்ந்த, கூருணர்வு கொண்ட செயல்முறையின் கட்டமைப்பினதும் அவசியத்தைப் புரிந்துகொண்டு விழிப்புணர்வுகொண்ட கூருணர்வு செயல்முறையை அனுசரிக்கும் தேவையை காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகம் புரிந்துகொண்டுள்ளது.

காணாமற்போன ஆட்களைப்பற்றி தேடுதல் நடத்துவதற்கு அமைக்கப்பட்டுள்ள பிற சர்வதேச அமைப்புக்கள்மீது கவனம் செலுத்தும்போது அவர்களின் பணிகளை நிறைவேற்றுவதற்கு பல ஆண்டுகள் தேவைப்பட்டன. ஒப்படைக்கப்பட்ட பணிகளின் சிக்கலான தன்மையைப் புரிந்துகொண்டு காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகம் நிலைபேறான நம்பகத்தன்மை வாய்ந்த கட்டமைப்பு என்பதையும், சிறந்த வழிமுறைகளுடன் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் முயற்சிகளினிடையே இடைக்கால நிவாரணங்களை வழங்க நாம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அடையாளம் கண்டுள்ளோம்.

**மிக முக்கியத்துவம் வாய்ந்த சாட்சிகளை இழக்க நேரிடுதல்**

21.நிர்மாணப் பணிகளின்போதும் விவசாயப்பணிகளைப் போலவே ஏனைய அகழ்வு நடவடிக்கைகளின்போதும் மனித உடல்களின் அவயவங்களைக் கண்டுபிடித்தல் தொடர்பாக காலத்திற்குக் காலம் தகவல்கள் அறிக்கையிடப்படுகின்றன என்பதை நாம் கண்டோம். அநேகமான சந்தர்ப்பங்களில் இத்தகவல்கள் பொலிஸாருக்கோ அல்லது ஏற்புடைய அதிகாரிகளுக்கோ அறிக்கையிடப்பட்டு இருக்கவில்லை. எனவே, இத்தகைய சந்தர்ப்பங்களின்போது பொதுமக்களைப் போலவே அரச நிறுவனங்களும் மிகத் துரிதமாக செயற்படும் தேவை வலியுறுத்தப்படுகிறது.

## 3. நீதியை உறுதிப்படுத்துவதற்கான அரச பொறுப்புக்கள்

22. காணாமற்போனோரின் உரிமைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்போது நீதியை நிறைவேற்றுதல் முக்கிய அரச பொறுப்பாகுமென காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகம் நம்புகிறது. வலிந்து மேற்கொள்ளப்பட்ட காணாமல் ஆக்கப்படுதலுக்கு ஏற்புடைய பொறுப்புக் கூறவேண்டியவர்கள் நீதியின் முன்னால் சமர்ப்பிக்கப்படுதல், காணாமற் போனோருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் நிவாரணங்களை வழங்கும் அத்தியாவசியமான நடவடிக்கையாக மாத்திரம் அல்லாமல் அது ஒட்டுமொத்த சமூகம் என்ற வகையில் முக்கியத்துவம் வகிக்கிறது.

ஏனெனில், நீண்டகாலமாக காணாமல் ஆக்கப்படுதல் குற்றவியல் குற்றமாகக் கருதப்பட்டு இதுவரை தண்டனை வழங்கப்படவில்லை. இத்தகைய குற்றவியல் குற்றங்களுக்கு தண்டனை வழங்குவது தற்போது சட்டத்தினால் வலுவாக்கம் செய்யப்பட்டுள்ளது. தண்டனை பெறுவதிலிருந்து விடுவிக்கும் சந்தர்ப்பம் தற்போது சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. நீதியை நிலைநாட்டும் பொறுப்பு இலங்கையின் சட்டவாக்கங்கள் மூலமும் உள்நாட்டு சட்டங்கள்மூலமும் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுவதற்கு எதிரான சமவாயங்கள் உட்பட சர்வதேச சட்டத்தின் மூலமும் வலியுறுத்தப்படுகிறது.

முன்னர் நடைமுறையில் இருந்த ஆணைக்குழுக்கள் மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான ஆலோசனை செயலணி மூலம் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்ற விடயத்தோடு தொடர்பான உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்துவதற்ம், ஏற்கனவே வழக்குகள் தொடரப்பட்ட வழக்குகளை பராமரிப்பதற்கும் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, இத்தகைய சந்தர்ப்பங்களின்போது பொதுமக்களைப் போலவே அரச நிறுவனங்களும் மிகத் துரிதமாக செயற்படும் தேவை வலியுறுத்தப்படுகிறது.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு குற்றவாளிகளுக்கு எதிராக வழக்கு தொடரும் அதிகாரம் கிடையாதபோதிலும் காணாமற்போதல் பற்றி அறிக்கையிடும்

சந்தர்ப்பங்களில் அது சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொள்வதற்கும், காணாமற் போதலுக்கு அப்பால் உள்ள குற்றவியல் குற்றம் அறிக்கையிடப்பட்டால் ஏற்புடைய சட்டத்தை அமுலாக்கும் மற்றும் வழக்குத் தொடரும் அதிகாரமுள்ள நிறுவனங்களுக்கு மேற்படி சம்பவத்தை அறிக்கையிடுவதற்கும் கடப்பாடு கொண்டுள்ளது.

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய சட்டம்**

23. 2017 மார்கழி 17 ஆம் திகதி இலங்கை ''அனைத்து ஆட்களையும் வலிந்து காணாமற் போகச் செய்தலுக்கு எதிரான சர்வதேச சமவாயத்தில்'' கைச்சாத்திட்டது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் தினமான ஆவணி 30 ஆம் திகதி நினைவு கூறப்படும்போது, அது இலங்கையில் விசேடமாக முக்கியத்துவம் பெறுகிறது. இவ்வாண்டில் இலங்கை மேற்படி சமவாயத்தை வலுவாக்கம் செய்து, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தினத்தை முதல்முறையாக நினைவு கூறியுள்ளது.

24. வலிந்து காணாமற்போகச் செய்தலுக்கு ஏற்புடைய பொறுப்பு, உள்நாட்டு சட்டத்தொகுதியில் 2018 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க சட்டத்தின்மூலம் அனைத்து ஆட்களையும் வலிந்து காணாமல் ஆக்கப்படுவதற்கு எதிரான சர்வதேச சமவாயச் சட்டம் (வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சட்டமூலம்) உருவாக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ள அடிப்படை நடவடிக்கை காணாமற்போனோர் பற்றித் தேடுதலும், அவர்களுக்கான நிவாரணங்களை வழங்குவதுமாகும். காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கும் மேற்படி பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதற்கமைய, இச்சட்டத்தின்மூலம் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் மேலும் சக்திபெற்றுள்ளது. காணாமற் போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றியும் அவர்களின் குடும்பங்களின் உரிமைகள் பற்றியும் அதிகளவில் உறுதிப்படுத்தப்படுகிறது.

25. மூன்று தசாப்தங்களாக பாதிக்கப்பட்டோர், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் வலிந்து காணாமற் போகச்செய்யப்படுதலை குற்றவியல் குற்றமாகுமென ஸ்தாபிக்குமாறு கோரினர். நடைமுறையில் உள்ள உள்நாட்டு சட்டத்தின்மூலம் கடத்தப்படுதல் குற்றமாகக் கருதப்பட்டாலும், வலிந்து காணாமற்போகச் செய்தல் குற்றவியல் குற்றமென நிறுவப்படுதலும், இதுதொடர்பாக வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. எனவே, வலிந்து காணாமற்போகச் செய்தல் குற்றவியல் குற்றமாக நிறுவுதல் இதற்கென முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் விசேடமான திருப்புமுனையாகும்.

26. அனைத்து நபர்களையும் வலிந்து காணாமற்போகச் செய்தலுக்கு எதிரான சர்வதேச சமவாயத்தில் இலங்கை கையொப்பமிட்டதையும், அதனை உள்நாட்டுச் சட்டத்தில் சேர்ப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளையும் நாம் பாராட்டுகின்றோம். அதேசமயம், ஏனைய அரச நிறுவனங்கள் வலிந்து காணாமற் போகச் செய்தல் குற்றவியல் குற்றமாகக் குறிப்பிடும்

உள்நாட்டுச் சட்டம் தொடர்பாக மேற்கொண்ட கவனிப்பு போதியதாக அமையவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்படுவதற்கு ஏற்புடைய குற்றவியல் குற்றத்தை வரைவிலக்கணம் செய்யும் சட்டத்தைத் தயாரிப்பதற்கு முன்னர் இருந்தே இக்குற்றத்தின் சில அடிப்படை அம்சங்கள் இருந்து வந்ததென்பதையும், குற்றத்தின் தொடர்ச்சியான வடிவத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் ஆக்கப்பட்டமை இச்சட்டம் இக்குற்றத்தோடு பங்கேற்கக்கூடிய குற்றவாளிகளை முழுமையாக உள்ளடக்கக் கூடிய வகையில் தயாரிப்பதில் தோல்வி கண்டுள்ளது.

இச்சட்டத்தின்மூலம் கட்டளைப்பொறுப்பு தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படவில்லையென்பதுடன் வலிந்து காணாமல் ஆக்குதல் மனிதத்துவத்திற்கு எதிரான குற்றமாகவும் அடையாளம் காணப்படவில்லை. முன்னர் அமுலில் இருந்த ஆணைக்குழுக்களினால் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் பரந்துபட்ட வகையில் மோதல் நிலவிய பிரதேசங்களிலும், அவற்றிற்கு வெளியேயும் இடம்பெற்றதென வலியுறுத்தப்படுகிறது. மேலும், இச்சட்டமானது முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவிற்குள்ள அதிகாரம் போலவே காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கும் உள்ளதென்பதை அடையாளம் காணவில்லை.

**விசாரணைகளும் வழக்குத் தொடுத்தலும்**

27. அரசின் நடத்தைக் கோலத்தின்மூலம் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்பற்றி நீண்டகாலமாக தண்டனையில் இருந்து விலக்களிக்கும் வகையில் செயற்பட்டிருப்பதாக காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம் வலியுறுத்துகிறது. முன்னர் செயற்பட்ட ஆணைக்குழுக்களும், நல்லிணக்கப் பொறிமுறை கலந்தாய்வுச் செயலணி அறிக்கையிட்டதன்படி இத்தகைய செயற்பாடுகள் போலியான முறைப்பாடுகளை அறிக்கையிடுதல் அல்லது முக்கிய தகவல்களை மூடிமறைத்தல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் உரிமைகளை மீறுவதற்கு ஏற்புடைய, நம்பகத் தன்மைவாய்ந்த சாட்சிகள் இருந்தபோதிலும் விசாரணை செய்வதற்கும், வழக்குத் தொடர்வதற்கும் இயலாமை மற்றும் விருப்பமின்மையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

28. வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் விசேடமாக இராணுவத்தையும் பொலிசாரையும், சார்ந்த பொறுப்பு வாய்ந்த பலம்பொருந்திய இடங்களைச் சேர்ந்தவர்களின்போது விசாரணைகளின்போது அழுத்தங்களைக் கொடுக்கக்கூடியவர்கள் இருப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. மேலும் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்த இராணுவ உத்தியோகத்தர்களுக்கு தொந்தரவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் அறிக்கையிடப்பட்டுள்ளன.

கடத்தப்படுவதற்கும், காணாமல் ஆக்கப்படுவதற்கும் ஏற்புடைய ஏற்கனவே நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கும் ஓர் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட உத்தியோகத்தர் பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்படாமல், ஆயுதப்படைகளில் தொடர்ந்தும் செயற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு மற்றுமோர் சம்பவத்தில் ஓர் உத்தியோகத்தருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட சந்தர்ப்பமும் காணாமற் போன பற்றிய அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கு அமையவும், நியாயமான நடைமுறைக்கு அமையவும் அத்தகைய உத்தியோகத்தர்களின் சேவை, இடைநிறுத்தப்படுவதும் ஏற்புடைய உத்தியோக நிலைமைகளில் பணியாற்றுவது நீக்கப்படுவதும் நியாயமான எதிர்பார்ப்பாகும்.

29. பல்வேறு நீதிமன்றங்களில் 10 ஆண்டுகளுக்குமேல் நீடித்திருக்கும் வழக்குகள் இருந்த போதிலும் மேற்படி வழக்குகளின் பாதிக்கப்பட்டோருக்கு காணாமற் போனோர் பற்றிய எதுவிதத் தகவல்களையும் இன்னும் பெற முடியவில்லை. இந்த வழக்குகளுக்கிடையே ஆட்கொணர்வு, கடத்தப்படுதல் மற்றும் கொலை வழக்குகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

30. இத்தகைய வழக்குகளில் சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தொடரும், வழக்கைப் பராமரிக்கும் நிறுவனமாகவும், மற்றுமோர் சந்தர்ப்பத்தில் ஆட்கொணர்வு மனு போன்ற விடயங்களில் பிரதிவாதிகளின் சார்பிலும் முன்னிலையாக நேரிடுகிறது. இதனால் உரிமைகளுக்கிடையே மோதல் உருவாக்கப்பட்டுள்ளதோடு ஆட்கொணர்வு வழக்குகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கவும், அவற்றை மேம்படுத்தும் பிரவேசத்தையும், அரசின் உரிமைகளுக்காகவும் தோற்றுவதைத் தவிர, பிரதிவாதிகளின் சார்பில் தோற்றக் கூடாதென குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆட்கொணர்வு மனு தொடர்பான வழக்குகளின்போது பல்வேறு வகையிலான அடிப்படை எதிர்ப்புக்கள் முன்வைக்கப்பட்டு, நீதி நிலைநாட்டப்படுவதற்கு தடைசெய்யும் சந்தர்ப்பங்களுக்கு உட்பட்டுள்ளது. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் அமைக்கப்படுதல் அந்தந்தத் தரப்பினருக்கு அரசியலமைப்பு ஏற்பாடான ஆட்கொணர்வு மனுவைப் பராமரிப்பதில் தடைகள் ஏற்படக்கூடாதென அறிவிக்கப்படுகிறது.

31. ஏற்கனவே செயற்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்கள் மற்றும் நல்லிணக்க பொறிமுறைகள் கலந்தாலோசனை செயலணி (CTF) இந்த கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் தொடர்பான மிக முக்கியமான பரிந்துரைகளை முன்வைத்துள்ளதோடு, அத்தகைய இரண்டு ஆணைக்குழுக்கள் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சுயாதீனமான வழக்குகளை நெறிப்படுத்தும் அவசியம் பற்றியும் பரிந்துரைத்துள்ளது. மேலும் மனித உரிமைகள் பேரவையின் 30/ 1 இலக்கத்தின்மூலமும் சர்வதேச மனிதாபிமான சட்டம் மீறப்பட்டமை மற்றும் மனித உரிமை மீறப்பட்டமை என்பவற்றுக்கு ஏற்புடைய தனியான விசாரணைகளை

நடத்தும் வழக்குகளைத் தொடரும் பொறிமுறையை உருவாக்குவதற்கான அரச பொறுப்பு வலியுறுத்தப்பட்டுள்ளது.

**விலக்கத்தக்கவை**

32. வலிந்து காணாமல் ஆக்கப்படுவதற்கு எதிராக மேலும் சட்டரீதியான மற்றும் நிறுவன ரீதியான மறுசீரமைப்புக்கள் அவசியமென்பதை காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகம் குறிப்பிடுகிறது. வலுக்கட்டாயத்தின் பேரில் கைதுசெய்தல், தடுத்து வைக்கப்பட்டோருக்கு எதிராக மேற்கொள்ளும் தொந்தரவுகள், குரோதமான கவனிப்பு மற்றும் கைது செய்யப்பட்டிருக்கும்போது உயிரிழத்தலுக்கு ஏற்புடைய தகவல்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. 2016 ஆணி மாதத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் தடுப்பில் உள்ளோரின் உரிமைகள்பற்றி பாதுகாப்புப் படையினருக்கு கௌரவ மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கட்டளைகளின் முக்கியத்துவத்தை நாம் வலியுறுத்துகின்றோம். தடுப்புக் காவலில் உள்ளோரின் பெயர்ப்பட்டியலை பராமரித்தலும், அனைத்து தடுத்து வைக்கப்படும் அமைவிடங்களை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதும் அரசின் பொறுப்பாகும்.

## 4. இழப்பீடுகளை வழங்குவது தொடர்பான அரசின் பொறுப்பு

33. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம், காணாமற்போன, வலிந்து காணாமலாக்கப்பட்ட நபர்களின் உறவினர்கள் எதிர்நோக்கும், பௌதீக உளவியல் சமூக மற்றும் பொருளாதார இழப்புகள் பற்றி அறிந்து வைத்திருப்பதோடு மேற்படி குடும்பங்களுக்கான இழப்பீடுகளை வழங்குதல் மேற்படி குடும்பங்களுக்கு மாத்திரமல்லாமல் ஒட்டுமொத்த காணாமற்போன சமூகத்திற்கும் அச்சமூகத்தின் நிலைபேறான தன்மைக்கும் சிறந்த இருப்பிற்கும் முக்கியமாகும்.

34. காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகம், காணாமற் போயுள்ள, வலிந்து காணாமலாக்கப்பட்ட நபர்களின் சகல உறவுகளும் கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு ஆளாக்கப்பட்டிருப்பதை அறிந்திருப்பதோடு, பெரும்பாலான காணாமல் போனோர் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களின் சுகாதாரம், சொத்துக்கள், வீடுகள் மற்றும் கல்வி ஆகிய சமூக பொருளாதார மற்றும் கலாசார உரிமைகள் கடுமையாக மீறப்படுதல் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

35. காணாமற்போன பெரும்பாலான குடும்பங்களின் சகல உறவுகளும் 30 வருடங்களுக்கும் மேலாக எவ்வித துணையோ உதவியோ இன்றி, பாரிய வேதனைகளுக்கும், அழுத்தங்களுக்கும் மத்தியில் தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். சில குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு இடையிடையே அரச ஒத்துழைப்பு கிடைத்துள்ளது.

தனது குடும்பத்தைப் பராமரிப்பவர்களை மேற்படி குடும்பங்கள் இழந்துள்ளன. அதேசமயம், இதற்கு மேலதிகமாக அனேகமான குடும்பங்களுக்கு காணமற்போனோர் தொடர்பில் உரிமைகோரப்படக்கூடிய நலன்புரி வசதிகள், வேதனங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கான சந்தர்ப்பங்களும் மறுக்கப்பட்டுள்ளன. சில குடும்பங்கள் எதிர்நோக்கியுள்ள பாரிய வறுமை தொடர்பாக காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகம் வலியுறுத்துகிறது. இவர்களில் அதிகமானோர் மிகமோசமான வறுமைக்கோட்டில் வாழ்கின்றனர். இவை அனைத்தும் வலிந்து காணாமல் ஆக்கப்படுதலின் விளைவுகளாகும். அதேசமயம் இவர்களில் பெரும்பாலான குடும்பங்கள் தமக்குள்ள அனைத்து செல்வத்தையும் நேரத்தையும், உழைப்பையும் தமது அன்புக்குரியவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு செலவு செய்துள்ளனர். இதன் நேர்விளைவே அவர்கள் பாரிய வறுமைக்கு உள்ளாக்கப்படுவதற்கு காரணமாகும்.

36. காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்துடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின்போது ஒரே தடவையில் செலுத்தப்படும் நஷ்ட ஈடு, வீட்டுவசதி, தொழில்வாய்ப்புக்கள், கல்வி என்பவற்றிற்கான ஒத்துழைப்பும் சமூக உளவியல் ஒத்துழைப்பும், சுகாதார வசதிகள் மற்றும் ஞாபகார்த்த தினங்கள் என்பவற்றை மறுசீரமைத்தல் ஆகிய பல்வேறு வகையான தேவைகள் முன்வைக்கப்பட்டன.

இழப்பீடுகளுக்கான ஒரு முறைமை என்பன காணாமற் போனோரைக் கண்டுபிடிக்க முடியாத குடும்பங்கள் மற்றும் பாதிப்புக்குள்ளான நபர்கள் என்போரால் முன்மொழியப்பட்டது. சமூக உளவியல் ஒத்துழைப்பு சுகாதாரசேவை என்பவற்றை வழங்குவது மற்றும் நினைவுகூரல் பொதுமக்களின் பிரகடனத்தின்மூலம் பாதிக்கப்பட்டோருடன் நெருக்கமான உறவை வைத்து அவர்கள் இதுவரை அனுபவித்து வந்த தனிமை மற்றும் வேதனைகள் என்பவற்றைக் குறைக்க முடியும்.

நாம் முன்வைக்கும் இப்பரிந்துரைகள் இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களாலும், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறுப்பினர்களோடும் சிவில் சமூகம் மற்றும் கிராம உத்தியோகத்தர்களுடனும் கலந்துரையாடி அவற்றின் அடிப்படையில் பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டன. இப்பரிந்துரைகள் இடைக்கால நிவாரணங்களை வழங்குவதற்கு ஏற்புடைய மட்டுப்படுத்தப்பட்ட கால எல்லைக்குள் செயற்படுத்தப்பட வேண்டும். இப்பரிந்துரைகள் உண்மையைக் கண்டறிவதற்கான அவர்களுக்கு உரித்தான உரிமைக்கு உத்தரவாதமளிக்கும், அங்கீகாரமளிக்கும் அதேசமயம் இடைக்கால நிவாரணங்களைப் பெறுவதும் இழப்பீடுகளுக்கான உரிமையையும், நீதியையும் உறுதிப்படுத்தும் அதேவேளை பாதிக்கப்பட்டோரின் நிரந்தரமான நீதியை பெற்றுக்கொள்வதில் எவ்விதமான தடைகளையையும் ஏற்படுத்த மாட்டாது என்பதனை பாதிக்கப்பட்டோருக்கு நாம் முழுமையாக உத்தரவாதப்படுத்த வேண்டும்.

**இழப்பீடுகளை வழங்குவது தொடர்பான சட்டரீதியான கடப்பாடுகள்**

37. பாதிக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகள் மீறப்பட்டமையால் ஏற்பட்ட வேதனையை ஆற்றுப்படுத்துவதையே இழப்பீடுகள் இலக்காகக் கொள்ள வேண்டும். இழப்பீடு என்பதில் இயல்பு நிலைக்கு கொண்டுவருதல், நஷ்டஈடு, புனர்வாழ்வு மற்றும் மீள் நிகழாமைக்கான உறுதிமொழி என்பன உள்ளடக்கப்படும். பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்குவதற்கு தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் இலங்கைக்குப் பொறுப்புண்டு.

38. இலங்கையின் உள்நாட்டுச் சட்டத்தின்கீழ், 2015 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிக்காரர்களைப் பாதுகாக்கும் சட்டத்தின்மூலம், பாதிக்கப்பட்டோர் அனுபவித்த இழப்புக்கள் தொடர்பாக இழப்பீடு செய்யும் பொறுப்பு உண்டு. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சட்டத்தின்மூலமும், நீதிமன்றத்தின் மூலமும் காணாமல் ஆக்கப்பட்டோர், பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈட்டை வழங்குமாறு கட்டளையிடலாம்.

39. உத்தேச இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் மூலம் நெருக்கடிகளின்போது பாதிப்புக்குள்ளானவர்களும் சகல காணாமற் போனோர் பற்றியும் இழப்பீடுகளைச் செய்யும்போது விசேடமான பணிகள் நிறைவேற்றப்படும். பாரதூரமான பொறுப்புக்களும் அமுலாக்கும் பாரிய அதிகாரமும் கொண்ட சுயாதீனமான அலுவலகம் அவசர தேவையாக உள்ளது. காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகம் இழப்பீடுகளுக்கான அலுவலக வரைவும் சக்திமயப்படுத்துமாறும் அதனைச் சிறப்பாக அங்கீகரிப்பதை உறுதிப்படுத்துமாறும் அதனை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் வேண்டுகோள் விடுக்கின்றது.

## 5. அவசரமான பரிந்துரைகள்

40. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பிரதான நோக்கம் ஏற்புடைய அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை சமர்ப்பிப்பதும், காணாமல் போதல் பற்றிய சம்பவங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதும், பாதிக்கப்பட்டோரினதும் குடும்பங்களினதும் உச்ச நன்மையை மையப்படுத்திய நிவாரணம் வழங்கும் வழிமுறையை அறிமுகப்படுத்துவதுமாகும். குறிப்பாக காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம், நினைவுகூரல், இழப்பீடுகள் மற்றும் மீள்நிகழாமையைப் பொறுப்பேற்கிறது. அதேசமயம் சட்டரீதியான மறுசீரமைப்புக்கள் தொடர்பாக பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் அதிகாரம் கொண்டுள்ளது. மேலும் காணாமற் போனோர் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர், மற்றும் இராணுவ நடவடிக்கைகளின்போது காணாமற் போனோரின் குடும்பங்களுக்கான இடைக்கால நிவாரணம் மற்றும் நலன்புரி வழிமுறைகளை முன்மொழிவதற்கும், காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகச் சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

41. காணாமற் போனோரினதும், கண்டுபிடிக்க முடியாதவர்களினதும் குடும்பங்களினதும் தற்போதைய சமூக பொருளாதார நிலைமை மிகவும் கவலைக்கிடமானது. இறுதியான இழப்பீடுபற்றிய வழிமுறையை ஆரம்பிக்கும்வரையும் அவர்களால் எவ்வகையிலும் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையே உள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் இராணுவ நடவடிக்கைகளின்போது காணாமற்போனோரின் குடும்பங்களுக்காக அவசரமான மற்றும் அண்மித்த நிவாரணங்களாக இடைக்கால நிவாரணங்களை வழங்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

42. மேலதிகமாக வலிந்து மேற்கொள்ளப்பட்ட காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிப்பதுபற்றி கவனிக்காது இருக்கமுடியாத கோரிக்கை நிலவுகிறது. இவை கடந்த காலத்தில் இடம்பெற்ற குற்றவியல் குற்றங்கள் அல்ல. காணாமற்போனோர் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் இராணுவ நடவடிக்கைகளின்போது காணாமற்போன குடும்ப உறவுகளுக்கு காணாமற்போனோர் பற்றி ஏதாவது தகவல்கள் வழங்கும்வரை தொடர்ச்சியாக நிலவும் குற்றவியல் குற்றங்களாகும். எனவே, அரசு போதிய சட்ட வரம்பை சிருஷ்டிக்கும் குறித்துரைக்கப்பட்ட அரச செயற்பாட்டாளர்களை விசாரணை நடவடிக்கைகளுக்காக வழக்குத் தொடர்ந்து பராமரிப்பதற்கு சக்தியூட்ட வேண்டிய அவசர தேவையுள்ளது.

### 5.1 இடைக்கால நிவாரண முன்மொழிவுகள்

43. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நிவாரணங்களையும் இழப்பீடுகளையும் பற்றிய மாற்றம் தொடர்பாக வலியுறுத்துகிறது. நிவாரணம் என்பது ஒடுக்குமுறைக்கு உட்பட்டோர் பொருளாதார சமூக மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் ஏனைய பொறுப்புக்களில் இருந்து விடுவித்து அவர்களை அமைதிப்படுத்துவதற்கு வழங்கும் அவசர உதவிகளாகும். இவை எந்த வகையிலும் இழப்பீட்டுக்கான உரிமைகளுக்கு தடையாகவோ அல்லது இழப்பை யதார்த்த நிலைக்கு கொண்டுவருவதற்கான, மேற்படி உரிமைகளை இல்லாதொழிப்பதற்கான காரணியாகவோ அமைவதில்லை.

44. நிவாரணங்களை வழங்குவது உரிய போதுமான பயனுறுதி வாய்ந்த இழப்பீட்டிற்கான உரிமையை எந்தவகையிலும் இல்லாதொழிக்காததோடு நீதிமன்ற நடவடிக்கைமூலம் வகைப்பொறுப்புக்கு உட்படுத்துவதற்குரிய உரிமைக்கு எதுவிதமான மட்டுப்பாட்டையும் ஏற்படுத்த மாட்டாது. முன்னைய நட்டஈடு வழங்கும் நடவடிக்கைமூலம் பாதிக்கப்பட்டோருக்கிடையே நம்பிக்கையீனம் ஏற்படுவதற்கும் உண்மை மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்கும் அரசுக்குள்ள விருப்பம் தொடர்பாக சந்தேகமும் உருவாகியுள்ளது.

45. நாம் முன்வைக்கும் பிரேரணைகள் சார்பில் ஏற்புடைய அரச கொள்கைகளை உடனடியாகத் தயாரிப்பதைக் கவனத்தில் எடுத்து, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் பின்வரும் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கின்றது.

(அ) **நிதி உதவி வேலைத்திட்டம்**: நிதி உதவி வேலைத்திட்டத்தைத் தயாரித்து, நிரந்தரமான வருமான மார்க்கம் இல்லாத காணாமற்போனோர் / வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் இராணுவ நடவடிக்கையின்போது காணாமற் போனோரின் உயிர்வாழும் மனைவி / பிள்ளை / பிள்ளைகள் / மற்றும் உயிர்வாழும் பெற்றோரில் ஒருவருக்கு / மாதாந்த வாழ்க்கைக் கொடுப்பனவாக 6,000 ரூபாய் பணத்தைக் கொடுத்தல். இது இடைக்கால நிவாரணமாக வழங்கப்படுவதோடு இறுதியாக இழப்பீடு வழங்கப்பட்ட பின்பு இது நிறுத்தப்படும்.

(ஆ)**கடன்நிவாரண வேலைத்திட்டம்**: காணாமற்போன, கண்டுபிடிக்க முடியாதவர்களின் குடும்பங்களை தனியான ஒரு பிரிவின்கீழ் உள்ளடக்கி (அ) நிதியமைச்சு தீர்மானிப்பதற்கேற்ப கடன் கட்டுப்பாட்டில் இருந்து நீக்குதல் (உதாரணமாக தேறிய நிதிக்கடன்) (ஆ) பொருளாதார நிலையான தன்மை மற்றும் சுயதொழில் முயற்சியின் மேம்பாட்டிற்காக நிதியமைச்சின்கீழ் செயற்படும் ‘‘என்டபிரைஸ் ஸ்ரீ லங்கா’’ கடன் முன்மொழிவுமூலம் கடன்வழங்குதல்.

(இ) **வீடமைப்பை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்**: காணாமற்போன மற்றும் கண்டுபிடிக்க முடியாதோரின் குடும்பங்கள் தனியான பிரிவின்கீழ் உட்படுத்தி வீடமைப்பு அமைச்சின்கீழ் வீடமைப்புக் கருத்திட்டத்திற்கமைய வீடுகளை வழங்குதல் அல்லது பகுதி பூர்த்திசெய்யப்பட்ட வீடுகளை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு நிதி உதவி வழங்குதல்.

(ஈ) **கல்விக்கான ஒத்துழைப்பு வழங்கும் வேலைத்திட்டம்**: காணாமற்போன மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளுக்காக அவர்களின் ஆரம்ப மற்றும் இரண்டாம்நிலைக் கல்வியைப் பூரணப்படுத்துவதற்கு அத்தியாவசியமான செலவுகளுக்காக கல்வியமைச்சின் கீழ் புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தை உருவாக்கி மாதாந்தம் 2,000 ரூபாய் நிதிஉதவி வழங்குதல்.

(உ) **தொழிற்பயிற்சி மற்றும் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்தும் வேலைத்திட்டம்**: தொழில் செய்யும்போதே, பயிற்சியும் உள்ளடக்கப்பட்ட தொழிநுட்ப பயிற்சிப் பாடநெறியை அறிமுகப்படுத்துதல்.

(ஊ) **தொழில் வாய்ப்புக்கான ஒதுக்கீடு**: விசேட தொழில்வாய்ப்பை வழங்குவதற்கு ஒரு வீதத்தை ஒதுக்கி அவசியமான தேர்ச்சியுடன்கூடிய காணாமற்போன, வலிந்து

காணாமல் ஆக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கான அரச துறையின் தொழில்வாய்ப்புக்களை ஒதுக்குதல்.

46. இந்த நிவாரணங்களுக்காக காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகச் சட்டத்தின் பொருள்கோடலுக்கமைய காணாமற்போன, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாத்திரம் அல்லாது, போருக்குப் பின்னர் காணாமற்போன, சிவில் குழப்பங்களின்போது காணாமற்போனோரும் உள்ளடக்கப்படுவர். இந்த நிவாரணங்கள் அநேகமாக அழுத்தங்களுக்கு உள்ளான ஒரு பிரதான குடியிருப்பாளர் மாத்திரம் இருக்கும் குடும்பங்கள், பிள்ளைகள் உள்ள குடும்பங்கள், தங்கிவாழ்வோர் உள்ள குடும்பங்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள் உள்ள குடும்பங்கள், மற்றும் வயோதிபர்கள் உள்ள குடும்பங்கள் மற்றும் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் உள்ள குடும்பங்கள் ஆகியோருக்கான விசேட கவனிப்பைக் குறிக்கோளாகக் கொண்டு பரிந்துரைக்கப்படுகிறது.

### 5.2 நீதிக்கான பரிந்துரைகள்

47. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்கான அவசரத்தேவைகளைப் புரிந்து கொண்டு, தகுதியானதும் பயனுறுதிவாய்ந்ததுமான விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடரும் செயல் முறையை உறுதிப்படுத்துவதற்கு காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் பின்வரும் பரிந்துரைகளைப் பரிந்துரைக்கின்றது:

**வலிந்து காணமல் ஆக்கப்பட்டமை தொடர்பான சட்டத்தை வலுவாக்கம் பெறச்செய்தல்**

அ) வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்களின் தொடர்ச்சியை அடையாளம் காண்பதும் குற்றவியல் குற்றச் சட்டம் அமுலாவதற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களின் உள்ளடக்கங்களை சேர்த்தலும்.

ஆ) சட்டத்தின் 3வது வாசகத்தைத் திருத்தி அனைத்து வகை குற்றவியல் குற்றவாளிகளையும் உள்ளடக்கக் கூடிய வகையிலும், வலிந்து காணாமல் ஆக்கப்படுதலை உள்ளடக்கக்கூடிய வகையிலும் சட்டத்தைத் திருத்துதல்.

இ) வலிந்து காணாமலாக்கப்படுதலை மனிதத்துவத்திற்கு எதிரான குற்றமாக அடையாளம் காணுதல்

ஈ) சட்டத்தின் 3(3) வாசகத்தை திருத்தி சகலவிதமான கட்டளையிடும் பொறுப்புக்களை உள்ளடக்குவதுடன் குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்படும் கட்டளைகளை உள்ளடக்குதல்.

உ) சட்டத்தின் 15(3) வாசகத்தைத் திருத்தி காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடனும் ஏனைய சட்டங்களை அமுலாக்கும் நிறுவனங்களுடனும் இணைந்து தனிநபர் சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் அமைவிடங்களுக்கு பிரவேசிப்பதற்கான உரிமையை வழங்குதல்.

ஊ)சட்டத்தின் 15வது வாசகத்தைத் திருத்தி தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் பெயர்களை உத்தியோகபூர்வப் பதிவேட்டில் சேர்த்துக் கொள்வதற்கான திட்டவட்டமான கால எல்லையை

நிர்ணயித்தல். வேண்டுமென்றே இதனை செய்யாமல் இருத்தல் அல்லது மேற்படி பதிவேட்டில் பெயர்களைச் சேர்ப்பதனை தடைசெய்தல் என்பவற்றிற்கு ஏற்புடைய தண்டனைகளை உட்சேர்த்தல்.

எ) சட்டத்தின் 20(3)வது வாசகத்தைத் திருத்தி மேல் நீதிமன்றத்திற்கும், மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும், காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கும் மனுக்களை அனுப்புவதற்கு வாய்ப்பளித்தல்.

ஏ) சட்டத்தின் 6வது வாசகத்தைத் திருத்தி கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ள, பிரத்தியேக நியாயாதிக்க அதிகாரத்தை நீக்கி, குற்றவியல் குற்றம் புரியப்பட்ட பிரதேசத்திற்குரிய மேல் நீதிமன்றத்திற்கு அதிகாரத்தை வழங்குதல்.

## விசாரணைகளும் வழக்குத் தொடருதலும்

ஐ) வலிந்து காணாமல் ஆக்கப்படுதலுக்கு ஏற்புடைய வழக்குத் தொடுத்தல்களை துரிதமாக நிறைவேற்றுவதற்கும் வழக்குகளை பராமரிப்பதற்கும் முக்கியத்துவம் வழங்குதல்.

ஒ) சகலவிதமான நியாயமற்ற கைதுகளையும், சித்திரவதைகளுக்கு உட்படுத்துதலையும் கைது செய்யப்பட்டிருக்கும்போது நிகழும் உயிரிழப்புக்களின்போதும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஓ) ஏதாவது ஓர் வழக்கின் குற்றம் சுமத்தப்பட்டவர் அல்லது சந்தேக நபராக பெயர் குறிப்பிடப்பட்டவர், அரச உத்தியோகத்தராகவோ ஆயதப்படைகளின் அல்லது பொலிஸ் படை உறுப்பினராகவோ இருப்பின் குறிப்பிட்ட வழக்கு விசாரித்து முடியும் வரை, அந்நபரை அவரது சேவையிலிருந்து இடை நிறுத்துதல். ஆயுதப்படை அல்லது பொலிஸ் படை உறுப்பினரை சேவை நிலையத்தில் இருந்து இடமாற்றம் செய்தல், பதவி உயர்வு வழங்குதல் அல்லது வேறு பதவி வழங்குதல் என்பன அவரது வழக்கு விசாரணை முடிவு செய்யப்படும் வரை மேற்கொள்ளப்படக் கூடாது.

ஔ) மனித எழும்புக்கூடுகள் சரியாக அடையாளம் காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, தற்போது மரண விசாரணை பற்றிய சட்ட அமைப்புக்களை திருத்த எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளை துரிதப்படுத்தவும், தேடுதல் மீளப்பெறுதல், அடையாளம் காணுதல் தொடர்பான முயற்சிகளுக்கு பொறுப்பான நிறுவனங்களுக்கிடையில் இணைப்பாக்கத்தை ஏற்படுத்துதலும்

க) சட்டத்தை அமுலாக்கும் உத்தியோகத்தர்களுக்கு, சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு, நீதி மன்றத்திற்கு காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கும், வழக்குத் தொடுப்பதற்கும், தண்டனைகளுக்கும் போதிய பௌதீக வளங்களும், மனித வளங்களும் வழங்கப்படவேண்டும்.

ங) எலும்புக் கூடுகள் மற்றும் மனித அவையவையங்கள் பற்றி அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான தேவைகளை ஏற்படுத்துதல்

### தடுப்பு

ச) ஆட்கள் கைது செய்யப்படும் போதும் தடுத்து வைக்கப்படும் போதும் உரிய செயல் முறைகளைப் பேணுதல்.

ங) தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் தடுத்து வைக்கப்படும் மத்திய நிலையங்களின் முழுமையான பட்டியல் ஒன்று பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

ஞ) நீதிமன்ற மீளாய்வு இன்றி சந்தேக நபர்களும் குற்றம் சுமத்தப்பட்டவர்களும் நீண்ட காலமாக தடுத்து வைக்கக் கூடிய பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளை நீக்குதல் அல்லது சீர் திருத்துதல்

**நினைவுகூறுவதற்கான அவசரமான பரிந்துரைகள்**

48. காணாமற் போனோர் மற்றும் இராணுவ நடவடிக்கைகளின்போது காணாமற்போன தமது அன்பார்ந்தவர்களைப் பற்றிய ஞாபகத்தோடு நீண்டகாலமாக தனிமையில் வேதனையுடன் இருந்த குடும்பங்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு பல தசாப்தங்களாக அனைத்து இனங்களுக்கும் உரித்தானவர்கள் காணாமல் போயுள்ளமையை ஏற்றுக்கொள்வது இலங்கை மக்களின் தேவையாகுமெனவும் அது தகுதியானது எனவும் நாம் அடையாளம் கண்டுள்ளோம். இதற்கமைய

அ) காணாமற் போனோருக்கான நினைவு தினம் ஒன்றைக் குறிப்பிடுதல்.

ஆ) பத்தரமுல்ல பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னமான ''அஹிம்சக்க ஆராமய' என்ற ஞாபகார்த்த மண்டபத்தை மீள ஸ்தாபித்தல்.

இ) அகழ்வு நடவடிக்கைகளின் பின்னர் கூட்டுப்புதைகுழிகள் ஞாபகார்த்த அமைவிடங்களாகப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

திரு. சாலிய பீரிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி
தவிசாளர்

திரு.எஸ்.கே.லியனகே, சட்டத்தரணி
ஆணையாளர்

கலாநிதி. நிமல்கா பெர்ணான்டோ
ஆணையாளர்

திரு. கணபதிப்பிள்ளை வேந்தன்
ஆணையாளர்

திருமதி. ஜெயதீபா புண்ணியமூர்த்தி
ஆணையாளர்

திரு. மிராக் ரஹீம்
ஆணையாளர்

மேஜர் ஜெனரல்(ஓய்வுபெற்ற) மொஹாந்தி பீரிஸ்
ஆணையாளர்